விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது
Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 24 ஞாயிற்றுக்கிழமை (10.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 295

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனிப்பட்ட கவனம் செலுத்துவேன்

### கலைஞரிடம் சோனியா காந்தி உறுதி

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் பிரச்சினையில் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்துவதாகச் சோனியா காந்தி உறுதி அளித்துள்ளார் எனத் தமிழக முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்றுப் புதுச்சேரி, திருச்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அவர் தனி விமானத்தில் சென்னை வந்தார்.

சென்னை வந்த சோனியா காந்தியை விமான நிலையத்தில் முதல்வர் கருணாநிதி பூச்செண்டு கொடுத்துப் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

அப்போது துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய (19 ஆம் பக்கம் பார்க்க)

## ★ பாலியல் வல்லுறவு முயற்சி ★ படைச் சிப்பாய் நையப்புடைப்பு

### வடமராட்சி கிழக்கில் சம்பவம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அண்மையில் மீளக்குடியமர்ந்த வீடொன்றுக்குள் புகுந்து பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்ட இராணுவச் சிப்பாய்களில் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மிக அண்மையில் வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்ந்த வீடுகளில் ஆண்கள் கடற்றொழிலுக்குச் செல்லும் சமயம் பார்த்துப் படைச் சிப்பாய்கள் அப் பகுதியிலுள்ள வீடுகளுக்குள் புகுந்து அங்குள்ள பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்டுள்ளனர்.

இதன்போது (20 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பேச்சாளர் இளந்திரையனை இராணுவமே அழைத்துச் சென்றது!



## ஆணைக்குழு முன் அவரின் மனைவி சாட்சியம்

(மட்டக்களப்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று மட்டக்களப்பில் தனது விசாரணைகளை ஆரம்பித்தது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த விசாரணை இடம்பெற்றது. ஆணைக்குழுவைச் சேர்ந்த 8 உறுப்பினர்களில் 6 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் தமிழ் உறுப்பினர்களான மனோ இராமநாதன் மற்றும் சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் துருப்பினருக்கு இலங்கையில் பயிற்சி

(கொழும்பு)

வெளிநாட்டுத் துருப்பினருக்கு இலங்கையில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினர் வெளிநாட்டுப் படை வீரர்களுக்கு விரைவில் பயிற்சிகளை வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ சேவை ஆரம்பிக்கப்பட்டு 61 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## ஐ.எம்.எப்.குழு இலங்கை வருகிறது

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்.) உயரதிகாரிகள் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கைக்கு அடுத்த கட்ட கடன் உதவியை வழங்குவது குறித்து இவ் விஜயத்தின்போது நாணய நிதிய அதிகாரிகள் ஆய்வு செய்யவுள்ளனர்.

ஆய்வுகளின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் 6 ஆம் கட்ட கடனுதவியை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையின் பொருளாதார நிலைமைகள் திருப்தியளிக்கும் வகையில் காணப்படுவதாக இறுதியாக சர்வதேச நாணய நிதியம் மேற்கொண்ட மதிப்பீடுகளின்போது அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தொலைக்கல்வி பயிற்சி வேண்டாம் ஆசிரிய உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்

### கோப்பாய் கல்வியியல் கல்லூரி முன் நடந்தது

(யாழ்ப்பாணம்)

20 ஆண்டுகளுக்கு முன் நிறுத்தப்பட்ட தொலைக்கல்வி மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டமையை எதிர்த்து 400றக்கும் மேற்பட்ட ஆசிரிய உதவியாளர்கள் நேற்று கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இக் கற்கைநெறியை நிறுத்தும் வரை தாம் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரிய உதவியாளர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

1990 ஆம் ஆண்டுக்கு முன் வெற்றியளிக்காமை காரணமாக நிறுத்தப்பட்ட தொலைக்கல்வி மீண்டும் இவ் வருடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக் கற்கை நெறி எமக்கு போதியளவு வேதனத்தைப் பெற்றுத்தராது.

வாரத்தில் ஐந்து நாள்கள் பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி விட்டு 2 நாள்கள் தொலைக்கல்வி மாணவர்களாக ஈடுபடுத்திய பின்பும் வேதனமாக 3 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கப்படும்.

இந் நிலையில் தொலைக்கல்வி கற்கை நெறியை நிறுத்தி ஆசிரிய உதவியாளர்கள் அனைவரையும் (19 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்டிருந்த புலிகள் எரிவாயு மூலம் கொல்லப்பட்டனர்

### மறுக்கிறது பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் சந்தேகத்துக்குரியவர்களை எரிவாயுக்களைக் கொண்டு கொலை செய்ததாகப் பொய்யான செய்திகளைப் பரப்பியவர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விசாரணையை நடத்தி வருகின்றது.

ஆதாரங்கள் தெரியாமல் இருப்பதற்காக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுவைக் கொண்டே இந்த இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதாகச் செய்திகள் பரப்பப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சீனாவிலிருந்து அவ்வாறான எரிவாயு இறக்குமதி செய்யப்படவில்லை என்றும் எனவே இது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் தமது உயர் கவனத்தைச் செலுத்தியுள் (19 ஆம் பக்கம் பார்க்க)

## இந்த வருடத்தின் இறுதிக்குள் மீள்குடியமர்வு முழுமைபெறும்

### பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் இடம்பெயர் மக்களை முழுமையாக மீள்குடியேற்றிவிட முடியும் என மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

இதுவரையில் 90 வீதமான இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோது பிரதி அமைச்சர் முரளிதரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 51 ஆயிரத்து 399 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படவுள்ளன. வவுனியா மெனிக்பாம் முகாமில் 6 ஆயிரத்து 225 குடும்பங்கள் (19 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்டெடுப்பு

அல்வாய் தெற்கு இயவரன் தோட்டத்தைச் சோந்த விஸ்வலிங்கம் விஜயசோதி என்பவருடைய அடையாள அட்டை (இல. 611942435V), மற்றும் விசேட அடையாள அட்டை (இல. அழிந்துள்ளது) ஆகியவை கண்டெடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக்காட்டி பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந-2)


## வீடு வாடகைக்கு

வட்டுக்கோட்டையில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0213211126 (C-1388)


# அமைச்சர் டக்ளஸூடன் யு.என்.டி.பி. பிரதிநிதி சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட வதிவிட பிரதிநிதி நீல் பூனே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் கடந்த 7 ஆம் திகதி மாலை கொழும்பிலுள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பணிமனைக்குச் சென்ற நீல் புனேயுடன் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறிப்பாக தமது அமைச்சின் மூலம் முன்கொண்டு செல்லப்படும் பாரம்பரிய கைத்தொழில்களின் அபிவிருத்தி மற்றும் சிறுதொழில் முயற்சிகள் தொடர்பாக எடுத்துரைத்த அமைச்சர்,

இவை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் மேற்கொள்ளக் கூடிய பங்களிப்பு குறித்த திட்டப் பிரேரணைகளையும் வதிவிடப் பிரதிநிதியிடம் சமர்ப்பித்தார்.

மேலும் வடபகுதியில் பெருமளவு வாழைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அறுவடைக்குப் பின்னரான வாழை மரத்தினை நார்ப்பொருள் உற்பத்திக்கும் கழிவு மீதிகளை பசளைக்கும் பயன்படுத்தக் கூடிய திட்டம் குறித்தும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

அத்துடன் பனை அபிவிருத்தி தொடர்பாகவும் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் திட்டங்களை தெரியப்படுத்தினார்.

கணிசமான தமிழ் மக்களின் வாழ்வாதாரத்துடன் பனை வளமானது தொடர்பு கொண்டுள்ள நிலையில் பனை ஆராய்ச்சி நிலையம் உட்பட அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஏனைய தேவைகள் குறித்தும் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

அமைச்சின் கீழ் உள்ள வடகடல் நிறுவன அபிவிருத்தி தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துரைத்தார்.

மேற்படி சந்திப்பின் போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஆலோசகர் திருமதி செகராசசிங்கம், இணைப்புச் செயலாளர் ராஜ்குமார் ஆகியோரும் உடனிருந்தனர். (ந)

# மரபுவழி நடனம் குழு இசைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யூனியன் அஷ்யூரன்சும் இலங்கைக் கல்வித் திணைக்களமும் முதன்முறையாக இணைந்து நடத்தும் பாடசாலைகளுக்கிடையேயான மாபெரும் மரபுவழி நடனம் மற்றும் குழு இசைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்கவுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு யூனியன் அஷ்யூரன்ஸ் வடக்கு வலய முகாமையாளர் சி.என்.மதிவதனன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

## நூற்றாண்டு விழா

### காலை அமர்வு

இடம் : பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபம்

காலம் : 14.10.2010 08.30 மணி

தலைமை : திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள்
அதிபர், யா/மகாஜனக் கல்லூரி

முதன்மை விருந்தினர் : திரு ஆ.சி.நடராஜா அவர்கள்
செயலாளர், கருணைப்பாலம்

### நிகழ்ச்சிகள்

- விசேட ஆராதனை
- ஸ்தாபகருக்கும், மகாஜன சிற்பிக்கும் மலர் அஞ்சலி
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- சிரேஷ்ட மாணவ தலைவர் கருணைப்பாலத்திற்கு நூற்றாண்டு நினைவாக அன்பளிப்பு வழங்குதல்

### மாலை அமர்வு

இடம் : கல்லூரியின் திறந்தவெளி அரங்கு

காலம் : 14.10.2010 3.00 மணி

தலைமை : திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள்
அதிபர், யா/மகாஜனக் கல்லூரி

முதன்மை விருந்தினர் : திரு நா.சிறிகங்காதரன் அவர்கள் (மகாஜனன்)
தலைவர் ப.மா.ச.லண்டன்

சிறப்பு விருந்தினர்

திரு.மு.நடராசா அவர்கள் (மகாஜனன்)
உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) வலிகாமம் வலயம்

### நிகழ்ச்சிகள்

* சின்னப்பா நினைவு நூலகம் திறந்துவைத்தல்

விளையாட்டு நிகழ்வுகள்

* துடுப்பாட்டம்

அமரர் ரோகான் ராஜசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தப் போட்டி
அனுசரணை : திரு.சி.சிவகரன் அவர்கள் (அவுஸ்திரேலியா)

* கரப்பந்தாட்டம்
* உதைபந்தாட்டம்

அனுசரணை : திரு.செ.வேலாயுதம் குடும்பத்தினர் (கட்டுவன்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மகாஜனக் கல்லூரி.

(சி-1387)



## வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனத்திற்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு :-
(C-1384) 0729994777

## காணி விற்பனைக்கு

நவாலியில் நல்ல சூழலில் பாதையோரம் விசாலமான கிணற்றுடன் கூடிய 5 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரதான பாதையில் இருந்து சுமார் 1/2 km தூரத்தில் அமைந்துள்ளது.

தொடர்பு :
(2646) 0776257911

## செல்லா சினிமா

மம்முட்டி அர்ஜுன் சினேகா மற்றும் பலர் நடிப்பில்



மூன்று ரிக்கெற் வாங்கினால் ஒரு ரிக்கெற் இலவசம்

இந்திய இலங்கை ஒரேதின வெளியீடு

வந்தே மாதரம்

அக்ஷன் காட்சிகள் நிறைந்த படம்

D.இமான் ஹென்றி அரவிந்த்.T.

பாடல்கள் : வைரமுத்து, நந்தலாலா, சினேகன், விவேகா.

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

## காணி விற்பனை

சரசாலை ஞானியார் தோட்டம் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள 50 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு :- 0775096916
0112361834

(2627)



## யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

## நூற்றாண்டு விழா (1910 - 2010)

இடம் : கல்லூரியின் திறந்த வெளியரங்கு

காலம் : 12.10.2010 செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணி

தலைமை : திருமதி சிவமலர் அனந்தசயனன்
அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

முதன்மை விருந்தினர் : திரு பொன்னையா கனகசபாபதி அவர்கள்
முன்னாள் புகழ்பூத்த அதிபர்

### நிகழ்ச்சிகள்

* மகாஜன சிற்பி தெ.து ஜயரத்தினம் அவர்களின் உருவச்சிலை திறந்துவைத்தல்
* மகாஜனன் நூற்றாண்டு மலர் வெளியீடு

சிறப்பு விருந்தினர்
(மலர் வெளியீட்டுரை)
திரு.சுப்பிரமணியம் சுந்தரசிவம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம்)

முதற்பிரதி பெறுபவர்
திரு.சின்னத்தம்பி ஸ்ரீநிலஜயன் (மகாஜனன்)

கௌரவ சிறப்புப் பிரதி பெறுபவர்
திரு.சரவணமுத்து விநாயகரத்தினம்
முன்னாள் ஆசிரியர், ஓய்வுபெற்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் வலயம்

மலர் ஆய்வுரை
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்
சிரேஷ்ட விரிவுரையாளரும் தலைவரும்
ஆங்கில மொழி கற்பித்தல் துறை, வவுனியா வளாகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஏற்புரை
திருமதி ரேணுகாதேவி கேசவன்
ஆசிரியர், யா/மகாஜனக் கல்லூரி

* மகாஜன மாதா குறும்பட வெளியீடு

வெளியீட்டுரை
பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள்
கல்வியியல் பேராசிரியர், தலைவர், சட்டத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

முதற்பிரதி பெறுபவர்
திரு.ட.சிறிதரன் அவர்கள்
மாகாண முகாமையாளர், மத்திய வங்கி

மதிப்பீட்டுரை :
திருமதி நவதர்சினி கருணாகரன் அவர்கள்
விரிவுரையாளர் நாடகமும் அரங்கியலும்
நுண்கலைத்துறை யாழ்.பல்கலைக்கழகம்

ஏற்புரை
திரு இ.ஞானேஸ்வரன் அவர்கள்
குறும்பட இயக்குனர் (ஆசிரியர், யா/மகாஜனக் கல்லூரி)

* நூற்றாண்டு விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பும் விருந்தினர் கௌரவிப்பும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


பாடசாலைச் சமூகம்
யா/மகாஜனக் கல்லூரி


(சி-1386)


அடம்பிடிக்கும் சிமெந்து வெண்படிவுகளுக்கு நிரந்தரத் தீர்வு
•சுவரில் ஈரக்கசிவைத் தடுக்கின்றது •பூச்சுப்பரப்பை 30% த்தால் அதிகரிக்கின்றது
Dulux
ஸ்பீட் பிறைம் அன்ட் சீல்
Dulux
Weathershield
Speed Prime & Seal
Water Based
World of Weathershield
பெயின்ற் பூசப்பட்டதன் பின் சிமெந்து வெண்படிவுகள் தோன்றுவதால்
வீட்டு சுவர்களுக்கும் பெயின்றுக்கும் பாரிய சேதம் ஏற்படுவதை நீங்கள் அறிவீர்களா ?
இதற்குப் பொருத்தமான தீர்வு டியூலக்ஸ் ஸ்பீட் பிறைம் அன்ட் சீல். புதிதாக சிமெந்து பூசப்பட்ட சுவர்களுக்கு (2 வாரங்களுக்குப் பின்) இதனைப் பூசினால் மேற்பூச்சுகளில் ஏற்படும் நிறமாற்றத்தைத் தடுக்க முடியும். நீருடன் கலந்து பூசுவதால் ஆரோக்கியத்திற்கு பாதிப்பும் இல்லை.
சுவருக்கு சிமெந்து பூசப்பட்டபின் வெண்படிவுகள் மறையும் வரை காத்திருக்க வேண்டியதில்லை.


Air Bike
AMRO
இலகுவான பயணத்திற்கு...
சுகமான சவாரி...
DEALERS WANTED
JAPANESE TECHNOLOGY
IMPORTERS AND DISTRIBUTORS
CENTRAL CYCLE STORES
#93, DAM STREET COLOMBO.12 TEL-011 2338220 FAX-011 2338626








லங்கா ஐ.ஓ.சி.நிறுவனத்தின் சமூக நல நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக் கே.காந்தா , வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் உரையாற்றுவதையும், ஆளுநர் மரநடுகையினை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர் ஒருவருக்கு ஆளுநர் மரக் கன்றினை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி யினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கரன்)

# நலம் தரும் நவராத்திரி



"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது பழ மொழி. அதைப்போல "புரட்டாதி பிறந் தால் புது வாழ்வு அமையும்" என் பது புதுமொழி. கன்னி ராசியில் சூரியன் சஞ்ச ரிக்கும் மாதத்தில் இரவு நேரத்தில் அம் பிகை வழிபாட்டை மேற் கொண்டால் இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறு மென்று வகுத்துக் கொடுத்தது தான் நவராத்திரி வழிபாடு.

சிவனுக்கு ஒருநாள் "சிவராத்திரி" ஜெகன்மாதாவிற்கோ ஒன்பது நாள் "நவராத்திரி" இந்த ஒன்பது நாட்களிலும் இலட்சுமியாக, சரஸ்வதியாக, துர்க்கையாக மூன்று ரூபங்களில் தேவி தன் சக்தியை வெளிப்படுத்துகிறாள். அவளுக்கு தீபம் காட்டி வழிபட்டால் நம் பாவங்கள் தீரும். கோபங் கள் மாறும். சாபங்கள் விலகும்.

நவராத்திரி ஒவ்வொரு நாளும் அம்பி கையின் வடிவம் என்ன? எவ்வாறு வழிபடு வது ? என்பதை பார்க்கலாம்.

## நவராத்திரி முதலாம் நாள்

### மங்கலத்தை வரவழைக்கும் மகேஸ்வரி வடிவம்!



நவராத்திரி முதல் நாள் மதுகையர் என்ற அசுரனை வதம் செய்த தேவியை மகேஸ் வரி வடிவத்தில் அலங் கரித்து பூஜிக்க வேண் டும். அலங்காரத்தில் அபயம், வரதம், புத்தகம், அட்சமாலை தாங்கிய குமாரியாக அமைத்து முத்துமாலை, இரத்தினமாலை, மல்லிகை மாலைசூட்டி மகிழலாம். வீட்டில் ஈசானிய மூலையில் கொலுவைப்பது நல்லது. தோடி ராகத்தில் பாடல்பாடினால் கோடி, கோடியாக நமக்கு பொருளை வழங்குவாள் அன்னை.

## நவராத்திரி 2ஆம் நாள்

### இராஜயோகத்தை வழங்கும் இராஜராஜேஸ்வரி வடிவம்



நவராத்திரியின் இரண்டாவது நாள் தேவியை இராஜராஜே ஸ்வரி அலங்காரத் தில் பூஜிக்க வேண் டும். துயரங்கள் தீர்க் கும் துர்க்கையாகவும், கவலைகள் தீர்க்கும் காளியாகவும் நினை த்து வழிபட வேண் டும். இன்று அன்னை மகிசாசுரனை வதம் செய்ய புறப்படும் நாள் . எனவே, கொலு மண்டபத்தில் சிம்மாசனம் அமைத்த இடத்தில் நேற்று அலங்கரித்த மகேஸ்வரி அலங் காரத்தை இராஜராஜேஸ்வரி அலங்காரமாக மாற்றி அமைக்கவேண்டும். கொலுவில் வைத்திருக்கும் பொம்மைகளையும் சிறு மாற்றம் செய்யவேண்டும்.

கரும்பு,வில், அம்பு,பாசங்குசம் ஏந்திய வடிவில் நவரத்தின மாலையையும் அன் னைக்கு அணிவிக்க வேண்டும். கவலைகள் தீரவும் காரிய வெற்றி கிடைக்கவும் ; கல்யாணி ராகத்தில் பாடல்கள் பாடலாம்.

## நவராத்திரி 3ஆம் நாள்

### வரங்களை.வழங்கும் வராகி வடிவம்



நவராத்திரியின் 3ஆவது நாளில் தேவியை வராகி வடிவத்தில் அலங் கரித்து பூஜிக்க வேண்டும். கொலு மண்டபத்தின் நடு வில் சிம்மாசனம் அமைத்து அதில் அம்பிகையின் வடி வத்தை வராகியாக மாற்றியமைக்க வேண் டும்.

சூலத்தை கையில் ஏந்தி மகிஷன் தலை மீது தேவி அமர்ந்த நிலையில் இருக்க வேண்டும். தேவியின் கழுத்தில் காசு மாலை, மரகத மாலை அணிவிக்க வேண்டும். சம்பங்கி செம்பருத்தி, செவ்வந்தி போன்ற வண்ண மலர்களை மாலையாக்கி அணிவித்தால் தொட்ட காரியங்கள் வெற்றிபெறும். துன்பங் கள் தூர விலகி ஓடும். அம்பிகையின் முன் னால் அமர்ந்து காம்போதி இராகத்தில் பாடல் கள் பாடினால் தேன் போல வாழ்க்கை மாறும்.

தேவியின் அழகான தோற்றமுடைய பொம்மைகளை அதிகமாக அடுக்கிவைக்க வேண்டும். "தா" என்று கேட்டவுடன் கொடுக் கின்ற "தாயாக" விளங்கும் அன்னையை வராகி வடிவத்தில் வழிபட்டால் வளங்கள் வந்துசேரும்.

சிவல்புரி சிங்காரம்

# லீக் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தில் அங்கம் வகிக்கும் 45 லீக் அணிகளுக் கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில்இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அனுராதபுர லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் அணிமோதவுள்ளது.

இப்போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள் ளது. போட்டியில் வெற்றி பெற்றால் பருத்தித் துறை உதைபந்தாட்ட லீக் அணி அரை யிறுதிக்குத் தெரிவாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

இதற்கு முன் இடம்பெற்ற போட்டிகளில் யாழ்ப்பாண லீக் இலங்கை விமானப் படை லீக், மட்டக்களப்பு லீக், ஹற்றன் லீக் ஆகிய லீக் அணிகளை பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக் அணி வெற்றி பெற்றது குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-24)

# தேசிய மட்ட சதுரங்க போட்டியில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் சாதனை

நீர்கொழும்பு லோயலாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற பாடசாலை களுக்கிடையிலான தேசிய மட்ட சதுரங்கச் சுற்றுப்போட்டியில் ஹாட்லிக் கல்லூரியின் 15, 19 வயதுப் பிரிவுகள் பங்குபற்றின.

இதில் 15வயதுப் பிரிவைச் சேர்ந்த மாணவன் ஜெ.கபிலானந் பங்குபற்றிய அனைத்துப் போட்டியிலும் வெற்றி பெற்று சதுரங்கப் பலகைப் பரிசை (Board Prize) பெற்றுக்கொண்டார் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# அதிபர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள 1ஏபி, 1சி பாட சாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்ட பத்தில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் வடமாகாண ஆளு நர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் மத்திய கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் டபிள்யூ. விஜயரெட்ணா ஆகி யோர் ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயல் திட்டம் தொடர்பாக விளக்க மளிக்கவுள்ளனர்.

மேலும் தரம் 1 பாடசாலை அதிபர்களுடன் வலயத்திட்டமிடல் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கோட்ட கல்விப் பணிப்பாளர்கள் அனைவ ரையும் தவறாது சமுகமளிக்குமாறு வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ் வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பஸ் வண்டி மோதியதில் பெண் பரிதாப மரணம்

பியகம சுதந்திர வர்த்தக வலய வளாகத் தின் பாதையில் நடந்துசென்று கொண்டி ருந்த பெண் தொழிலாளி ஒருவர் மீது சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களின் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டி ருந்த தனியார் பஸ் வண்டி மோதியதில் ஸ்தலத்திலேயே அப்பெண் பலியான சம்ப வம் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, பியகம சுதந்திர வர்த்தக வல யத்தில் தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரியும் வலிவேரியப் பிரதேசத்தைச் சேர்ந்த எச்.பீ.இனோகா சுதர்சினி (வயது 34) என்ற 3 பிள்ளைகளின் தாய், நேற்று முன் தினம் வேலைக்குச் செல்வதற்காக சுதந்திர வர்த்தக வலய வளாகத்தில் நடந்து சென்று கொண்டிருந்தபோதே பஸ்ஸில் மோதுண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து சம்பவத்தை அடுத்து பஸ் ஸை கைப்பற்றிய பியகம பொலிஸார் பஸ் ஸின் சாரதியையும் கைது செய்துள்ளதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு, வன்னிமாவட்டங்களில் சிங்களவர்களை மீள்குடியேற்ற நடவடிக்கை

## மீள் குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மற்றும் வன்னி மாவட்டங்களில் 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் வசித்து வந்த சிங்களவர்களை அங்கு குடியேற்றும் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மீள் குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

மன்னார் மடு வீதியின் இரு புறங்களிலும் 85 சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளதுடன் அவர் தமிழ் மக்களுடன் ஐக்கியமாக வாழ்ந்து வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்தின் முருங்கன் பிரதேசத்தில் ஏற்கனவே குடியிருந்த 25 சிங்கள குடும்பங்கள் அவர்கள் முன்னர் வசித்து வந்த கிராமங்களில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பிரதேசத்தில் உள்ள அரச காணிகளை இவர்களுக்கு சட்ட ரீதியாக வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதற்கு சிங்கள மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். மேற்கூறிய மூன்று மாவட்டங்களில் 83ஆம் ஆண்டுக்கு முன்னர் வாழ்ந்த சிங்களவர்கள் உயிரோடு இல்லையென்பதால் அவர்களின் பிள்ளைகள் அங்கு சென்று வசிக்க முடியும்.

இதேவேளை வெளியில் இருந்து அழைத்துச் செல்லப்படும் சிங்களவர்கள் எந்த விதத்திலும் இம் மாவட்டங்களில் குடியமர்த்தப்பட மாட்டார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. அதேவேளை யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் சென்று தமக்கு குடியேற சந்தர்ப்பமளிக்குமாறு கோரி 1983ஆம் ஆண்டுக்கு முன்னர் வாழ்ந்த 60 சிங்கள குடும்ப்ங்கள் அங்கு சென்று அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும் இதனை தான் ஊடகங்கள் வாயிலாகவே அறிந்துகொண்டதாகவும் இவர்கள் அமைச் சுக்கோ அதிகாரிகளுக்கோ எவ்வித முன்னறி விப்பும் செய்யாமல் யாழ்ப்பாணம் சென்றுள் ளனர் எனவும் அமைச்சர் மில்ரோய் பெர் ணான்டோ குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் யாழ்ப்பாணம் சென்றுள்ள சிங்கள குடும்பத்தினருடன் பேச்சு நடத்துமாறு தான் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டதாகவும் மீள் குடியேற்ற அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## இந்திய கப்பல்கள் இலங்கை வந்துள்ளன

இந்திய கடற்படையின் முதலாவது பயிற்சி பிரிவின் நான்கு கப்பல்கள் இலங்கை வந்தடைந்துள்ளதாக கடற்படை பேச்சாளர் கப்டன் அதுல செனரத் தெரிவித்துள்ளார். கப்பல்கள் திருகோணமலைக்கு சென்றுள்ளதாகவும் 160 கடேட் அதிகாரிகள் இலங்கை வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இலங்கையில் தங்கி இருப்பார்கள் என கடற்படை பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## உரமானியக் கொடுப்பனவு

(கல்வயல்)

கல்வயல் விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கான உரமானியக் கொடுப்பனவு இன்று ஞாயிற்றுக்கிழமை வழங்கப் படவுள்ளது.

இதனை அனைத்து விவசாயிகளும் தவறாது பெற்றுக் கொள்ளுமாறு கல்வயல் விவசாய சம்மேளனத்தலைவர் கா.வேத நாயகம் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2-31)

## கச்சதீவின் உரிமை கோரி தமிழக மீனவர்கள் போராட்டம்

கச்சதீவில் தமக்குரிய உரிமைகளை பெற்றுத்தருமாறு கோரி இராமேஸ்வர மீனவர்கள் நேற்றுமுன்தினம் முதல் காலவரையறையற்ற தொழில் பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது கோரிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததை அடுத்தே இந்த போராட்டத்தை இராமேஸ்வர மீனவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

கச்சதீவில் தமிழக மீனவர்களுக்கு பாரம்பரிய உரிமை இருக்கிறது. என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் இந்தநிலையில் இத்தீவுக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட தமக்கு அனுமதி தரப்படவேண்டும் என மீனவர்கள் கோரியுள்ளனர். இதேவேளை நாளை திங்கட்கிழமை கச்சதீவுக்கு பயணிப்பதற்கும் மீனவர்கள் தீர்மானித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# புலி ஆதரவாளர்களுடன் இணைந்து பொன்சேகாவின் புதல்வியர் ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சி

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் புதல்வியர் தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்களுடன் இணைந்து தந்தையை விடுதலை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

சரத்பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி லண்டனில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்ட மொன்றில் புலி ஆதரவாளர்களுடன் இணைந்து சரத் பொன்சேகாவின் புதல்வியர் போராட்டங்களில் ஈடுபட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத்பொன்சேகாவின் குடும்ப உறுப்பினர்கள் மன்னிப்பு கோருவதன் மூலம் ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதிலை பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்கவினால் சரத்பொன்சேகாவின் சார்பில் விடுக்கப்படும் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாதென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## கொழும்பின் முக்கியமான பிரதேசங்களில் பாதுகாப்பு கமரா பொருத்தப்படவுள்ளது

கொழும்பின் 28 இடங்களில் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றத் தடுப்பு நடிக்கைகளை மேற் கொள்ளும் நோக்கில் இந்தப் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்படஉள்ளதாகவும் கொழும்பின் முக்கிய பிரதேசங்களில் மொத்தமாக 105 கமராக்கள் பொருத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாதுகாப்பு கமராக்களை பொருத்துவதற்காக சுமார் முப்பது கோடி ரூபா செலவானதெனத் தெரிவிக்கப்படுவதோடு குற்றச் செயல்களை மேற்கொண்டு தப்பிச் செல்லும் நபர்கள் பற்றிய தகவல்களை துல்லியமாக அறிந்து கொள்வதற்கு இந்தப் பாதுகாப்பு கமராக்கள் வழிவகை செய்யும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான பாதுகாப்பு கமராக்களின் மூலம் குற்றச்செயல்களை 75 வீதத்தினால் குறைக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன் இதனை இயக்குவது தொடர்பில் இலங்கை பொலிசார் சிங்கப்பூரில் பயிற்சிகளை பூர்த்தி செய்துள்ளனர். (ஸ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்





சண்முகதாஸ் சாருமதி
(156 புள்ளிகள்)
கொ/நல்லாயன் மகளிர் மகாவித்தியாலயம்,
கொட்டாஞ்சேனை.

கோபாலதாஸ் சுயானி
(156புள்ளிகள்)
யா/இடைக்காடு மகாவித்தியாலயம்,
அச்சுவேலி.

2010 - தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, 17.10.2010 இல் தனது 10ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் செல்வி சாருமதியை பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பெரியத்தை குடும்பம்(ஜேர்மனி), சின்ன அத்தை குடும்பம்(வாதரவத்தை),
பெரியப்பா குடும்பம் (ஜேர்மனி), உஷா அத்தை குடும்பம்(வாதரவத்தை).

(2639)


# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 60 வயதில் கட்டாய ஓய்வு

## பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 60 வயதில் கட்டாய ஓய்வு அளிக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித் துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் சகல உத்தியோக்ததர்களும் 60 வயது பூர்த்தியானவுடன் ஓய்வு பெறவேண்டுமென பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஓய்வு பெறும் வயதெல்லை தொடர்பில் விசேட சுற்று நிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளதாகவும் இதுவரை காலமும் அமுலில் இருந்த சேவை நீடிப்பு குறித்து சட்டங்கள் இரத்து செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் காலங்களில் பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ள சகல உத்தியோகத்தர்களும் 60 வயதில் கட்டாயமாக ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சேவைகளை வினைத்திறனாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


மாபெரும் மலிவு விற்பனை
தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
11.10.2010 முதல் 05.11.2010 வரை
சகல விதமான துணிவகைகள் மற்றும் றெடிமேற் ஆடைகள் என்பனவற்றை விசேட கழிவு விலையில் மலிவாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.





லைடன் புடைவை நிலையம்
இல.40, ஆஸ்பத்திரி வீதி,(பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
(சி-1382) தொலை பேசி :- 021 222 2381

# ஞாபகமறதிப் பிரச்சினையா?

படிக்கும் மாணவ, மாணவிகளில் பலரும் ஞாபக மறதிப் பிரச்சினையால் அவதிப்பட்டு வருகிறார்கள். விழுந்து விழுந்து படித் தும் தேர்வில் எல்லாம் மறந்து போய் விடுகிறதே என்று வேதனைப்படுகிறார்கள்.

ஞாபக மறதிப் பிரச்சினையிலிருந்து விடுபட மாணவர்கள் இந்த வழிமுறைகளைப் பின்பற்றிப் பார்க்கலாம்.

☞ இரவில் பாடம் படித்தபின் வேறு எந்த வேலையையும் செய்யாமல் தூங்கச் சென்றுவிடுங்கள்.

☞ மறுநாள் காலை எழுந்து இரவில் படித்தவற்றை ஞாபகப்படுத்திப் பாருங்கள். வேறு எந்த வேலையிலும் உங்களை ஈடுபடுத்தி விடாதீர்கள். காரணம் அந்த வேலை பற்றிய நினைவுகள் ஏற்கனவே நீங்கள் படித்தவற்றை மறக்கடிக்கும் வாய்ப்புள்ளது.


☞ கணக்குப் பாடங்களைப் பார்க்கப் போகிறீர்களா? அதற்கு முன் மூளைக்கு அதிக வேலை கொடுக்கின்ற செயலில் ஈடுபடாமல் மனதைக் கொஞ்சம் ஓய்வாக வைத் திருந்துவிட்டு பிறகு படிக்கச்செல்லுங்கள்.

☞ இரவில் நெடுநேரம் கண்விழித்துப் படிப்பது என்று இல்லாமல் போதுமான அளவு உறங்குவது ஞாபகசக்தியைப் பாதிக்காமல் இருக்கும்.

☞ ஒரு சிக்கலான பாடத்தைப் படிக்கிறீர்கள். அது மூளையில் பதியவில்லை. அதே ஞாபகமாகத் தூங்கச் செல்கிறீர்கள். தூங்கு முன் அந்தப் பாடத்தை மனத்திரையில் கொஞ்சம் ஓடவிடுங்கள். காலையில் அந்தப் பாடம் மனதில் ஏறக்குறைய முக்கால் வாசி பதிந்திருப்பதை உணர முடியும். மீதி கால் பாகத்தை மீண்டும் ஒருமுறை வாசிப்பதன் மூலம் படித்து முடித்துவிடலாம். இது மனோவியலாளர்கள் கண்டுபிடித்திருக்கும் உண்மை.

☞ பொதுவாக காலையில் மனம் தூய்மை புத்துணர்வோடு இருக்கும் கடினமான பாடங்களை அந்த வேளையில் படித்தால் எழுதில் மனதில் பதியும்.

☞ ஒரு கேள்விக்கான பதிலைப் போல மற்றொரு கேள்வியின் பதில் இருந்தால் அதை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதேபோல அக் கேள்விகளின் விடைகள் நேர் எதிர் மறையாக இருந்தாலும் அந்த இரண்டையும் தொடர்புக்குள்ளாக்கி நம்மால் நினைவுக்குக் கொண்டுவர முடியும். நமக்குப் புரிகிற மாதிரியான தொடர்புமுறையை ஏற்படுத்திக் கொண்டால் போதும்.



☞ முறையான மறுபார்வை (ரிவிஷன்),நல்ல நினைவாற்றலையும்,கற்றலை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வரும் ஆற்றலையும் நிச்சயம் தரும்.

☞ நாம் உண்ணும் உணவுக்கும், ஞாபகசக்திக்கும் தொடர்பு உண்டு. புரதம் அதிகம் கிடைக்கும் கீரை, காய், கிழங்கு போன்றவற்றை அதிகம் உண்டால் நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும். வல்லாரைக் கீரை, நினைவாற்றலைக் கூட்டும்.

☞ படமாகக் கண்ணால் காண்பதை நாம் அதிகம் மறப்பதில்லை. எனவே, பாடம் தொடர்பான படங்களை அடிக்கடி புரட்டிப் பார்க்க வேண்டும். வரைந்து பார்க்க வேண்டும்.

☞ பெரிய பாடப் பகுதிகளுக்கு,அவை தொடர்பான சிறுசிறு குறிப்புகளை எழுதி வைத்துக்கொள்வதும், அவற்றை அவ்வப் போது நினைவுபடுத்திக் கொள்வதும் பலனளிக்கும்.

☞ எல்லாவற்றுக்கும் மேலாக முக்கியமான விடயம், ஈடுபாடு. நாம் என்றோ பார்த்த ஒரு சினிமாவில் காட்சி, வசனத்தை அப்படியே மறக்காமல் கூறுகிறோம். ஆனால், நேற்றுப் படித்த பாடத்தை மறந்து விடுகிறோம். அதற்குக் காரணம், ஆர்வம், ஈடுபாடுதான். படிப்பதை கடமையாக மேற்கொள்ளாமல், பிடித்தமான விடயமாக மாற்றிக்கொண்டால் நிச்சயம் மறக்காது.


# மின்காந்த அலைகள் என்றால் என்ன?

மின்சாரமும் காந்தமும் ஒருவிதமாகச் சேரும் போது ஏற்படும் சக்தியின் வெளிப்பாடே 'மின்காந்த அலைகள்' (எலக்ட்ரோ மேக்னட்டிக் வேவ்ஸ்) ஆகும். இது பூமியிலிருந்தும் இந்தப் கிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருட்களிலிருந்தும் இயற்கையாகவே எழுகிறது. சூரியனி லிருந்து நமக்கு வரும் ஒளி கூட ஒருவித மின்காந்த அலையே.

இந்த மின்காந்த அலைகளின் அலை நீளத்தைப் பொறுத்து இவற்றின் தன்மை மாறுபடும். அவ்வாறு மாறுபட்ட தன்மைகள் பலவிதமாக வெளிப்படுகின்றன. அவை ரேடியோ அலைகள், மைக்ரோ அலைகள், ஒளி அலைகள் ,அகச்சிவப்புக் கதிர்கள், புறஊதாக் கதிர்கள், எக்ஸ் கதிர் மற்றும் காமா கதிர் ஆகும்.

ஒரு கடத்திழியில் ( கண்டக்டர் ) மின்சாரம் பாயும் போது அதைச் சுற்றி காந்தப் படலம் உண்டாகிறது என்று கண்டறிந்தார்கள். அதற்கு எதிர்மறையாக ஒரு மாறுகின்ற காந்தப் படலத்தைச் சுற்றியுள்ள ஒரு கடத்தியின் வழியாக மின்சாரம் பாய்கிறது என்று மைக்கல் பரடே கண்டுபிடித்தார்.

மாறுகின்ற மின்னோட்டம் ஒரு மின் காந்த அலையை உருவாக்கிறது என்று 1873 இல் மேக்ஸ்வெல் கண்டறிந்தார். அது வெளிப்புறமாக ஒளியின் வேகத்தில் பாய்கிறது. நம் கண்ணுக்கு தெரியும் ஒளியே ஒருவித மின்காந்த அலை தான். அந்த ஒளி அலை யானது மின்காந்த அலை வரிசையில் மிகச் சிறிய பாகத்தையே கொண்டிருக்கிறது. மேக்ஸ் வெல்லின் கொள் கைகள் இன்றும் உபயோகத்தில் உள்ளன.



மேக்ஸ்வெல்லின் கோட்பாடு விண்வெளியில் மிக முக்கியமான மின்னேற்றத்தை ஏற்படுத்தியது.

ஏனென்றால் பூமியில் மட்டுமல்லாது பிரபஞ்சத்தில் உள்ள அத்தனை பொருட்களில் இருந்தும் மின்காந்த அலைகள் உற்பத்தியாகின்றன என்று தெரியவந்த போது அவற்றைப் பற்றிய நிறைய விடயங்களை இன்னும் நுணுக்கமாக ஆராய்வது மேலும் எளிதானது.

மிக அதிக அலை நீளம் உள்ள மின் காந்த அலைகள் ரேடியோ அலைகள் என்று அழைக் கப்படுகின்றன. இவை இரண்டு அடியிலிருந்து 10 கிலோ மீற்றர் வரை அலை நீளம் கொண்டதாக இருக்கும். இவை மூன்றடிக்கும் கீழே இருந்தால் 'மைக்ரோ அலைகள்' எனப்படுகின்றன. ரேடியோ அலைகள் மைக்ரோ அலைகளை விட அலைநீளத்தில் குறைந்திருந்தால் அவை அகச்சிவப்புக் கதிர்கள் எனப்படுகின்றன. அவற்றைக் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் அவற்றின் வெப்பத்தை உணர முடியும்.




# கிருமிகளைக் கண்டுபிடித்தவர் !



முதல் முதலாக கொலரா கிருமிகளையும், மற்ற நோய்க்கிருமிகளையும் கண்டு பிடித்தவர் ஜெர்மன் விஞ்ஞானி ரொபர்ட் கோக். 1883ஆம் ஆண்டில் நோய்க்கிருமிகளை அவர் கண்டுபிடித்தார்.

அவர் பெயரால் அமைந்துள்ள ஆய்வகம்,இன்று கொலரா கிருமிகளை முறியடிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ரொபர்ட்கோக் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். காச நோய் கிருமிகள், கொலராக்கிருமிகள் ,காயங்களில் தொற்றும் கிருமிகள் ஆகியவற்றை கண்டுபிடித்து ,அவற்றைத் தடுக்கும் முறைகளையும் முதல் முதலில் கண்டு பிடித்தார்.

அதற்குப் பின்பு தான் மனிதர்களுக்கும் , விலங்குகளுக்கும் ஏற்படுகின்ற பல கொடிய நோய்களை அடையாளம் கண்டு பிடிக்கும் முறைகள் வகுக்கப்பட்டன. இன்றைக்கும் கூட கிருமிகளால் உண்டாகும் நோய்களைப் பற்றிய ஆய்வுகளுக்கு ரொபர்ட் கோக்கின் கண்டுபிடிப்புகளே ஆதாரமாய் விளங்குகின்றன.

# 'மிதக்கும் தீவு!'

சார்காஸோ கடலில் அதன் மேற்பரப்பு முழுவதையும் ஒரு வகை புதர்ச் செடிகள் மூடியிருப்பதால் அது ஒரு தீவு போலத் தோன்றுகிறது. அதனால்தான் அதை மிதக்கும் தீவு என்றுஅழைக் கிறார்கள்.



அட்லாண்டிக் பெருங்கடலில் பெர்முடாவுக்கு தெற்கிலும் அமெரிக்க நிலப்பரப்பில் இருந்து கிழக்கே பலநூறு கிலோ மீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளது. இந்த மிதக்கும் தீவு.

அந்தக் கடல் பகுதி தன்னுள் பல மர்மங்களைகளைச் செடிகளால் மூடிக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். கடல் பரப்பு முழுவதும் களைச் செடிகள் மண்டிக் கிடப்பதே ஓர் அதிசயம் தான். பல கப்பல்கள் இங்கு மர்மமான முறையில் மூழ்கி யிருக்கின்றன.

இத்தனைக்கும் இது மிகவும் அமைதியான கடலாகும். மெக்சிகோ வளைகுடா, கரிபியன் கடல் பகுதிகளிலிருந்து காற்றினாலும் கடல் நீரோட்டத்தாலும் அடித்து வரப்பட்ட களைகளே இங்கு மண்டியுள்ளன.

# மருதங்கேணி வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியை இயக்க கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு பகுதியில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள சூழ்நிலையில் இப் பிரசேத்தில் உள்ள மருதங்கேணி வைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவு மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இதேவேளை இவ்வைத்தியசாலையில் மகப்பேற்றுவிடுதி மற்றும் ஏனைய விடுதி களையும் இயக்குவதற்கு சம்பந்தப்பட்டவர் கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென மருந்தங்கேணி வைத்தியசாலையின் அபிவிருத்தி சபையினர் கோரிக்கை விடுத் துள்ளனர். (ஸ்ரீ-43)

# 'கலைமுகம்' 50 ஆவது இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலைமுகம் கலை இலக்கிய சமூக இதழின் 50 ஆவது இதழ் வெளியீடு. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை பீ.சே. கலீஸ், வாழ்த்துக்களை சூழலியலாளரும். ஊடகவியலாளருமான பொ.ஐங்கரநேசன், சிகரம் ஊடக இல்ல பணிப்பாளர் கோ.றுஷா ங்கன் ஆகியோர் நிகழ்தவுள்ளனர்.

தொடர்ந்து கருத்துரையை கலைமுகப் பிரதம ஆசிரியர் நீ.மரியசேவியர் அடிகள், வெளியீட்டுரையை திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் நிகழ்த்தவுள்ளார்.

நூலின் முதற்பிரதியை தேசிய கலை இலக்கியப் பேரவைசெயலாளர் சோ.தேவரா ஜா பெற்றுக்கொள்வார். அதைத் தொடர்ந்து யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரன், யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இ.இரா ஜேஸ்கண்ணன் ஆகியோர் மதிப்பீட்டுரையை வழங்கவுள்ளனர்.தொடர்ந்து கலைமுகம் பொறுப்பாசிரியர் கி.செல்மர் எமில் ஏற்புரை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ)

# வாரம் ஒரு தகவல்

## எண்ணம் இருப்பது எங்கே?

"அப்பா,உங்களை ஒரு சிந்தனையாளர் என்று ஊரில் எல்லோரும் சொல்கிறார்கள்"

" ஆமாம் அதில் என்ன சந்தேகம் உனக்கு?"

" அதில் எனக்கு சந்தேகமில்லை. என்னுடைய சந்தேகம் வேறு"

" என்ன சந்தேகம்? கேள்"

" மனசு என்று சொல்கிறோமே அது எங்கே இருக்கிறது?"

" என்னுடைய மகன் நீ. அதனால்தான் இவ்வளவு புத்திசாலித்தனமாக கேட்கிறாய்.

எண்ணத்தை தவிர மனம் என்ற ஒன்று தனியே கிடையாது. எண்ணங்கள் தோன்றுகின்ற இடம் என்று ஒன்று இருப்பதாக கற்பனை செய்து கொண்டு அந்த இடத்தையே 'மனம்' என்கிறோம். உள்ளே நுழைந்து விபரித்தால் உண்மையான மனம் என்று ஒன்றைப் பார்க்க முடியாது. இப்படி 'மனம்' இல்லை என்று இயல்பான நிலையை உணர்ந்து அடங்கினால் சாந்தி உண்டாகும்."

"அடேயப்பா"

"அவசரப்படாதே! இன்னும் கேள். மனம் என்பது பொய். அதன் உருவம் மாயம். ஆகையினால் மெய்யொடு பொருந்திய யோகி அந்த மனத்தின் வசப்படாமல் தனிமரமாய் நிற்பான்"

"அற்புதமான விளக்கம் அப்பா. இது உங் களுடைய சொந்த சிந்தனையா?

"இது என்னுடைய சிந்தனை இல்லையப்பா. இரமணருடைய நிந்தனை. இதைப் பற்றியெல்லாம் நாமும் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் சிந்தனை என்பது மனிதனுக்கு இருக்கும் மகத்தான ஒரு சக்தி. ஒவ்வொரு மனிதனும் சுயமாக சிந்திக்க வேண்டும்.

"அது சரி, சுயமாக சிந்திப்பது என்றால் என்னப்பா?"

" கொஞ்சம் இரு, உன் அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# தரம் -6 இற்கு மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யா/தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி யில் 2011ஆம் ஆண்டில் தரம் 6இற்கு தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாணவர் களை அனுமதிப்பதற்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப் படிவங் களை அலுவலகத்தில் பெற்று எதிர் வரும் 30ஆம் திகதி சனிக்கி ழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர் திருமதி எஸ். அனந்தசயனன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நவராத்திரி விழா

(கல்வயல்)

நவராத்திரி விழாவை முன்னிட்டு கல் வயல் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனையும், பூசையும் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2-31)

# கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் கட்டட வேலைகள் தொடர்பான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 13ஆம் திகதி மு.ப.10 மணிக்கு யாழ். மேலதிக மாகாணக்கல்வித்திணைக் களத்தில் நடை பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு அழைக் கப்பட்ட அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கறிக் கையினை தவறாது எடுத்து வரும் படியும் மேலும் இக் கலந்து ரையாட லில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொள்வார் என யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித் துள்ளார். (ஸ்ரீ-19)

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியற் றுறையால் நாளை திங்கட்கிழமை நடாத்தப் படவிருந்த புவியியலாளன் திட்டமிடல் இதழ்கள் வெளியீட்டுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் குறித்த திகதியில் இடம்பெறமாட்டாதெனவும் இச்சீட்டி ழுப்புக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படு மென யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் செல்வி. ஆர்.கஜேந்தினி அறிவித் துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

10.10.2010
(புரட்டாதி 24, ஞாயிற்றுக்கிழமை)
திருதியை முன்னிரவு 7.45 மணி வரை
விசாகம் பின்னிரவு 3.49 மணி வரை
இராகுகாலம் 4.32 - 6.02 மணி வரை
சுபநேரம் 9.02 - 10.32 மணி வரை

**மேடம்** விருந்தினர் வருகையுண்டு, திருமண முயற்சி வெற்றி தரும், தொழிலில் நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், சென்ற இடத்தில் செல்வாக்குண்டு, விநாயகர் வழிபாடு அதிர்ஷ்டத்தை வரவழைக்கும்.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும், உடல் நலமும் சீராகும், கடன் சுமை குறையும், பொருட் சேர்க்கையுண்டு, பயணத்தின் மூலம் நன்மை கிடைக்கும்.

**மிதுனம்** பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், சான்றோர்களின் சந்திப்பு கிட்டும், குடும்பத்தில் குதூகலம் கூடும், உடல் நலக்குறைவுண்டு.

**கடகம்** வாகன யோகமுண்டு, தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி வந்து சேரும், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும், பெரியோர் உதவியுண்டு.

**சிங்கம்** அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சந்தித்த நண்பர்களால் வளர்ச்சி கூடும், வீடு மனை சம்பந்தப்பட்ட வகையில் இலாபம் கிடைக்கும், சகோதரர் வழி உதவிகள் உண்டு.

**கன்னி** மனக்குழப்பமுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், இடம், பூமி வாங்கும் எண்ணம் மேலோங்கும், உடல் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், நல்ல வாழ்வமைய விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்** குடும்பத்தில் பெரியோரின் சொற்படி நடப்பீர்கள், கொடுக்கல் வாங்கல்களில் ஒழுங்கு காணப்படும்,திடீர் பயணத் தால் பணவரவு ஏற்படும், கற்பனை மிகுதியுண்டு.

**விருச்சிகம்** காரியங்களில் வெற்றிபெற கடவுளை வழிபட வேண்டிய நாள், விழாக் களில் கலந்து கொண்டு மகிழ்ச்சி யடைவீர்கள், புகழ் கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பு கிட்டும்.

**தனுசு** பொது வாழ்வில் புகழ்கூடும், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும்,தொழில் உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், குடும்ப உறுப்பினர்கள் அன்பாக நடந்து கொள்வர்.

**மகரம்** தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் வகுப்பீர்கள், பெரியோரின் சந்திப்பு கிட்டும், புதிய தகவலால் மகிழ்ச்சி யடைவீர்கள், ஆரோக்கியம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், தந்தைவழி ஆதரவுண்டு, திடீர் பயணத்தால் பலன் உண்டு.



**மீனம்** உறவினர் வழியில் சுபசெலவுகளை சந்திக்கலாம், உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,தொழில் கூட்டாளிகளிடம் கூடுதல் கவனம் தேவை.


வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 50 |
| தக்காளி | 80 | 60 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 80 | 60 | 40 |
| பூசணி | 40 | 35 | 35 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 35 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 40 | 70 |
| பாகற்காய் | 150 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 |
| கரணைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பயிற்றங்காய் | 120 | 90 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 30 | 20 | 30 |
| கறிமிளகாய் | 70 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 180 | 80 | 150 |
| போஞ்சி | 130 | - | 130 |
| கத்தரி தம்புள்ள | 80 | 45 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 60 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 40 |



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற இஸ்லாமியக் கலைவிழாவில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ஜனாப்.ரிஷாத் ஜனாப் பதியுதீன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப்.உனைஸ் பாரூக் உள்ளிட்ட விருந்தினர்கள் அதிபர்,இஸ்லாமிய மன்றத்தலைவர் பிலால் மற்றும் விரிவுரையாளர்களால் வரவேற்கப்படுவதையும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை,மௌலவி என்.கே.எஸ்.முனாஜித் ஆகியோர் உரையாற்றுவதையும் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் கலாநிதி செ.திருநாவுக்கரசு நினைவுப்பரிசில் வழங்குவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் ஆசிரிய மாணவர்களின் கோலாட்ட நிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரன்,றாமி)

# கசிப்பு உற்பத்தி பொருட்களை வீட்டில் வைத்திருந்த மூவருக்கு அபராதம்

(கரவெட்டி)

கசிப்பு உற்பத்தி பொருட்களை தம் வீடுகளில் வைத்திருந்த குற்றத்திற்காக மூவருக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் கடந்த 8ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி வழக்கை விசாரித்த திருமதி ஜோய்மகிழ் மகாதேவா முதலாவது சந்தேக நபரை விசாரணை செய்த போது சந்தேக நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு ஒரு இட்சம்ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருவருட சாதாரண சிறைத்தண்டனையையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

இரண்டாவது சந்தேக நபரை மன்றில் விசாரணை செய்தபோது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத கால சிறைத்தண்டனையும் வழங்கினார்.

மேலும் மூன்றாவது சந்தேக நபரை மன்றில் விசாரணை செய்த போது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் சந்தேக நபருக்கு 25ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த தவறின் 3 மாத கால சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

(ஸ்ரீ-24)

# இரணைமடுவில் மூன்றாவது சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

70 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி இரணைமடு பிரதேசத்தில் இலங்கையின் மூன்றாவது சர்வதேச விமான நிலையத்தை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் விமான ஓடுதளம் அமைந்திருந்த பிரதேசத்தில் இந்த விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது.

1.6 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இரணைமடு விமான ஓடுதளம் நீளத்தை 3 கிலோ மீற்றர் நீளமான விரிவுபடுத்தப்படவுள்ளது.

அத்துடன் நிர்மாணிக்கப்படவுள்ள கிளிநொச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக விடுதிகள் அமைக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# பொன்சேகாவை சிறைவைத்தமைக்கு எதிரான சுவரொட்டி ஒட்டும் போராட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சிறை வைத்துள்ளமைக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டும் போராட்டம் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திற்கு எதிரில் ஆரம்பமானது.

இதில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சர்வாதிகார வெறிக்கு எதிரான மக்கள் இயக்கம் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தாகவும் கோட்டை மற்றும் லேக் ஹவுஸ் பிரதேசங்கள் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதாகவும் எனினும் இந்த சுவரொட்டிகளை பொலிஸார் பின்னர் அகற்றியுள்ளனர் என தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

# ஏனைய கைதிகளைப்போன்றே பொன்சேகாவும் நடத்தப்படுகிறார்

## அனோமா தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன் சேகா சிறைச்சாலையில் ஏனைய கைதிகள் போன்றே நடத்தப் படுவதாகவும் அவரின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு நீதி மன்றம் அனுமதி வழங்கிய நிலையிலேயே உடற்பயிற்சி இயந்திரம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. எனவும் அனோமா பொன்சேகா கூறியுள்ளார்.

பொன்சேகா உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஆரோக்கிய நிலையில் இருப்பதாகவும் சிறைச்சாலை உணவுகளை உட் கொள்வதாகவும் அனோமா பொன்சேகா தெரிவித்தார். எனது கணவர் ஒரு வலிமையான மனிதர் என அவர் கூறினார்.

அதேவேளை ஏனைய கைதிகளுக்கு தொலைக்காட்சி பார்க்கும் வசதி இருக்கும் நிலையில் தமக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வேண்டுமென சரத்பொன்சேகா கோரியுள்ளதாகவும் அனோமா பொன்சேகா தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வடமராட்சி கிழக்கிலுள்ள பொதுச்சந்தைகள் மீள ஆரம்பம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பொது மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் இப்பகுதியில் உள்ள கடற் தொழிலாளர் கூட்டுறவுச்சங்களின் நிர்வாகத்திற்குட்பட்ட உடுத்துறைப் பொதுச் சந்தை, ஆழியவளைப் பொதுச் சந்தை, வத்திராயன் பொதுச்சந்தை என்பன மீளவும் இயங்கத் தொடங்கியுள்ளன.

இதனால் இப்பகுதி மீனவர்கள் தங்களது மீன்களை உடனடியாக சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றன.

(ஸ்ரீ-43)

# அரசாங்க பாடசாலை சீருடைகள் நவம்பர் மாதம் முதல் விநியோகம்

## பிரதி கல்வியமைச்சர் பாராளுமன்றத்தில் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடத்துக்கான அரசாங்க பாடசாலை சீருடைகள் நவம்பர் மாதம் முதல் விநியோகிக்கப்படும் என பிரதி கல்வியமைச்சர் ரி.பி. ஏக்கநாயக நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வாய்மூல வினாவுக்கு பதிலளித்தபோதே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,


நிதியமைச்சர் மற்றும் வர்த்தக அமைச்சு ஆகியன ஒன்றணைந்து உருவாக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவினர் அரசாங்க பாடசாலைகளுக்கான சீருடைகளை கொள்முதல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்களைக் கலந்தாலோசித்த பின்னர் அவர்களால் வழங்கக்கூடியவை போக ஏனைய துணிவகைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்றும் பிரதியமைச்சர் கூறினார். (ஸ்ரீ-2)

# இலங்கை இயக்கத்துக்கு இந்தியாவில் விசாரணை ஏன்?

## சூடு பிடிக்கும் புலி விவகாரம்

'மல்லிகை இல்லம்'! மறக்கமுடியாத மாளிகை. சென்னை அடையாறுப் பகுதி இருக்கும் இந்த இல்லத்தில் தான்,ராஜீவ்கொலை வழக்கு



தொடர்பான விசாரணை நடந்தது. நீண்ட காலத்திற்குப் பின்னர், கடந்த 5ஆம் திகதி, அதே மல்லிகைக்கு மீண்டும் மீடியாக்கள் படையெடுத்தன. இதுவும் விடுதலைப்புலிகள் விவகாரம் தான்.காரணம், விடுதலைப்புலிகளுக்கு தடையை நீடிக்கலாமா கூடாத என்ற கேள்வி! புலிகள் மீது தடை விதிக்கப்பட்ட 92ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை, தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்ட போதும் இம்முறை நடைபெற்ற தீர்ப்பாயம் தான் ஒட்டுமொத்த தமிழகத்தின் கவனத்தையும் ஈர்த்தது. காரணம் டில்லியில் நடந்த இந்தத் தீர்ப்பாய விசாரணையில் வைகோ பங்கேற்று பேசியது பரபரப் பானது. அடுத்த கட்டவிசாரணை சென்னை மற்றும் ஊட்டியில் நடக்கும் என்று நீதிபதி விக்கிரமஜித்சென் அறிவித்தார். அதன்படி,சென்னைக்கு வந்தார் நீதிபதி சென்.

முன்னதாகவே வந்த வைகோவும் நெடுமாறனும் காத்திருந்தார்கள். டில்லித் தீர்ப்பில் கடைசிப் பகுதியின் படி ,வாதாட வந்திருப்பதாக வைகோ கூறவும் உரிய தருணத்தில் அனுமதிப்பதாக நீதிபதி கூறினார். நெடுமாறனின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் என் சந்திரசேகர், "தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தை ஆதரித்த காரணத்தால், நெடுமாறன் தலைவராக இருக்கும் தமிழர் தேசிய இயக்கமும் தடை செய்யப்பட்டது. இதனால், அவரது இயக்கத்தின் அரசியல், செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.


புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கினால்,அவரது இயக்கத்தின் மீதான தடையையும் உடைக்க வழி ஏற்படும்!" என்று கூறி,இந்த விசாரணையில் தங்கள் தரப்பையும் மனுதாரராக இணைத்துக்கொள்ளக் கூறினார்.

மத்திய அரசு வழக்கறிஞர் அமிர்ஜித்சிங் சாந்தி யோக்,"தமிழர் தேசிய இயக்கத்தின் மீது குற்றவியல் திருத்தச்சட்டத்தின் கீழ் தடை விதிக்கப்பட்டது. அதற்கும் புலிகள் தடைக்கும் தொடர்பு இல்லை. அவர்கள் நீதிபெறவேண்டிய இடம் உயர்நீதிமன்றம் தான்,இந்த தீர்ப்பாயம் அல்ல. விடுதலைப் புலிகளின் ஆதாரவாளர்கள் என்பதால் யாரையும் மனுதார ராக இந்த விசாரணையில் இணைக்க இடமில்லை!" என்று வாதிட்டார். விடுதலைப்புலி களின் ஆதரவாளர் என்ற முறையில் ,தமிழக மக்கள் உரிமைக்கழகத்தின் செயலாளர் புகழேந்தி சார்பில் வாதிட வந்த வழக்கறிஞர் இராதாகிருஸ்ணன், "தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு என்பது இலங்கையைத் தளமாகக் கொண்டது.

ஜூனியர் விகடன்

இந்தியாவின் ஆதாரவாளர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள்.

இந்தியாவில் இல்லாத ஓர் அமைப்புக்கு இங்கு பொறுப் பாளர்களோ, உறுப்பினர்களோ இல்லாத போது அவர்களால் எப்படி வந்து வாதாட முடியும்? புலிகள் அமைப்பின் உறுப்பினர் தான் வாதிட முடியும் என்றால் இந்த தீர்ப்பாய விசாரணை இங்கே ஏன் நடக்கவேண்டும்? இலங்கையில் அல்லவா நடக்கவேண்டும்! புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டு விட்டது என்னும் போல் அதன் ஆதரவாளர்கள் தானே




நெடுமாறன், சந்திரசேகரன்

தீர்ப்பாயத்திற்கு வர முடியும்.... வேறு யார் வருவார்கள்? இதற்கு அனுமதி இல்லை என்றால்,இந்த விசாரணை வெறும் சடங்காகத்தான் இருக்க முடியும்!" என்று ஆவேசமாகக் கூறினார்.

இவரது வாதத்திற்கு பதில் சொன்ன டில்லி வழக்கறிஞர் சிங், "மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்கள் பயங்கரவாத இயக்கத்திற்கு ஆதரவாக வாதிடுவது ஆச்சரியமளிக்கிறது!"என்று குற்றம் சாட்டினார். உடனே,நெடுமாறனின் வழக்கறிஞர் சந்திரசேகரன்,"உங்கள் கருத்துப்படி மட்டும்தான் விடுதலைப்புலிகள் பயங்கரவாத இயக்கம்!" என பதிலளித்தார். முதல் நாள் விசாரணை இப்படி முடிந்தது! இரண்டாவது நாளான 6ஆம் திகதி ஆர்.ஏ.புரத்தில் உள்ள 'இமேஜ்' அரங்கத்தில் விசாரணை தொடர்ந்தது.

அதில் நெடுமாறன், புகழேந்தி இருவருக்கும் மனுதாரராக இணைத்துக் கொள்ள முகாந்திரம் இல்லை எனக்கூறி,மனுக்களைத் தள்ளுபடி செய்தார் நீதிபதி சென்.

"சாட்சிக்கூட்டில் நிற்கும் க்யூபிரான்ஸ் எஸ்.பி. அசோக்குமாரிடம் ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா?" என்று வைகோவிடம் நீதிபதி கேட்டார். உடனே அவர், "க்யூப்பிராஞ்ச் இங்கு தாக்கல் செய்துள்ள அத்தனைக் குற்றச்சாட்டுக்களும்



புகழேந்தி, ராதாகிருஷ்ணன்

பொய்யானவை. அவை இட்டுக் கட்டிப்புனையப் பட்டவை. முழு ஆவணங் களையும் எங்களிடம் கொடுத்தால் தான் விளக்கம் கேட்க முடியும்!" என்று சொன்னார்.

"உங்களது மனுக்களை தள்ளுபடி செய்து விட்டாலும் வழக்கு விசாரணை வரும் போது உங்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளிக்கிறேன்" என்று நீதிபதி சொன்னதை இவர்கள் தங்களுக்குக்கிடைத்த வெற்றியாகவே பார்க்கிறார்கள்.

விக்ரமஜித் சென்



இந்த நிலையில் வழக்கறிஞர் இராதாகிருஸ்ணன்,லண்டனில் இருக்கும் முன்னாள் புலி உறுப்பினர் ஜோசப் றொபின்சன் என்பவர் சார்பில் மனுதாரராக இணைத்துக்கொள்ள அனுமதிக்குமாறு கேட்டார். அது தொடர்பான இமெயில் கடிதத்தையும் அவர் கொடுத்தார். ஆனால், போதுமான ஆதாரங்களுடன் மனுவைத் தாக்கல் செய்யுமாறு கூறிய நீதிபதி,அதைத் திருப்பித் தந்துவிட்டார். இதனால்,அடுத்த விசாரணையில் முன்னாள் புலி உறுப்பினரின் மனுவந்தால்.... அது ஏற்கப்படுமா? என்ன நடக்கும்? சஸ்பென்ஸ் தொடர்கிறது!.

இரா.தமிழ்க்கனல்

# காங்கேசனில் ஹோட்டல் மற்றும் சர்வதேச ஹோட்டல் பாடசாலை

## சீமெந்துக் கூட்டுத்தாபனம் அமைக்கிறது

(கொழும்பு)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், இலங்கை அரசாங்கத்துடன் கூட்டிணைந்து காங்கேசன்துறையில் ஹோட்டல் ஒன்றையும், சர்வதேச ஹோட்டல் பாடசாலை ஒன்றையும் அமைக்கவுள்ளது. 700 மில்லியன் ரூபாய் முதலீட்டில் மேற்படி திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 777 ஏக்கர் நிலம் மேற்படி திட்டத்தை நிறைவேற்ற ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சிசிர பரணகம தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மின்சாரம், சீமெந்து கற்கள், சிலிண்டர் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை கூட்டுத்தாபனம் அமைத்து வருகிறது. இதன் மூலம் அப் பகுதி இளைஞர்கள் 100 பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது. இதை இவ் வருட இறுதிக்குள் 500 பேராக அதிகரிக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

அடுத்த 5 ஆண்டுகளுக்கான நீண்டகாலத் திட்டத்தை நாங்கள் கொண்டுள்ளோம். குறிப்பிட்ட காலத்தில் எமது தற்போதைய சீமெந்து உற்பத்தியை 100 வீத்தால் அதிகரிக்கவேண்டும். இந்த நோக்கிலே காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை அரசு பெரிய முதலீட்டில் மீள ஆரம்பிக்கவுள்ளது எனவும் பரணகம மேலும் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 4 மில்லியன் மெற்றிக்தொன் சீமெந்து உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் நாட்டின் நுகர்வு 4.5 மில்லியன் மெற்றிக் தொன்களாகும். அத்துடன் 2 லட்சம் மெற்றிக் தொன்னுக்கும் மேற்பட்ட சீமெந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்நிலையில் இலங்கையில் எதிர்காலத்தில் சீமெந்து தொழிற்துறைக்கு பிரகாசமான வளர்ச்சியுண்டு.

இலங்கையில் வடக்கிலும் தெற்கிலும் உட்கட்டமைப்பு ,வீதி அபிவிருத்தி போன்ற வேலைகள் நடைபெறுவதால் சீமெந்து நுகர்வு மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




# 51 வீத பங்குக்கு 63 மில்.டொலர் கொடுத்து செல் காஸ் கம்பனியை அரசு வாங்கியது

ஷெல் லங்கா காஸ் கம்பனியின் 51 வீத பங்குகளை 63 மில்லியன் அமெரிகக பொலர்களுக்கு இலங்கை அரசு கொள்வனவு செய்துள்ளது. அமைச்சரவையின் அங்கீகாரத்தையடுத்தே இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஷெல் காஸ் கம்பனியின் 51 வீத பங்குகளையும், ஷெல் டேர்மினல் லங்கா லிமிட்டட்டின் 100 வீத பங்குகளையும் இலங்கை அரசு வாங்கியுள்ளது.

நிறுவனம் தமது வர்த்தக நடவடிக்கைகளை மறுசீரமைக்கும் நோக்குடன் இலங்கையிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளது. ஷெல் கம்பனியின் மூலதனமாக 37.9 மில்லியன் டொலர்களே இருந்தது. களஞ்சிய வசதிக்காக கம்பனி 65 மில்லியன் டொலர்களை செலவு செய்துள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவதற்காக 24 மில்லியன் அமெரிக்க டொலர்களும் செலவு செய்யப்பட்டுள்ளது.

லங்கா காஸ் கம்பனியின் தாய்

## மக்கள் வங்கியின் த. நி. அதிகாரியாக எச்.எஸ்.தர்மசிறி

மக்கள் வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் பொது முகாமையாளராக எச்.எஸ்.தர்மசிறி நியமிக்கப்பட்டுள்ளார். முகாமைத்துவ உதவியாளராக இணைந்த இவர், ஒரு பொருளியல் பட்டதாரியாவார்.

மக்கள் வங்கியில் கிளை முகாமையாளர் ,பிராந்திய உதவி முகாமையாளர் ,பிரதான முகாமையாளர், சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் என பல தரப்பட்ட பதவிகளையும் வகித்துள்ளார். தற்போது வங்கியியல் அமைப்புக்களான AIB,IBSL,FIB இலும் அங்கத்துவம் கொண்டுள்ளார்.

## சிறிலங்கன் ஏர்லைன்ஸின் ஏர்டாக்சி டிசம்பரில் மீண்டும் ஆரம்பமாகிறது

சிறிலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் தங்களது உள்நாட்டு விமான சேவையான ஏர்டாக்சி (Air Taxi) சேவையை மீண்டும் அறிமுகப்படுத்துகின்றது. இது தொடர்பாக சிறிலங்கன் ஏர்லை ன்ஸ் நிறுவன உயர் அதிகாரி எம்.பாசி ல் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏர்டாக்சி சேவையை மீண்டும் ஆரம்பிப்தில் பெருமிதம் கொள்வதாகவும், இதன் மூலம் இலங்கையின் உப்பகுதியை 40 நிமிடங்களில் சுற்றிப் பார்த்து விடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்ந ஏர்டாக்சி சேவை மூலம், இலங் கைக்கு வரும் வெளிநாட்டு சுற்று லாப் பயணிகள் எவ்வித தடங்கல் மற்றும் இடையூறுமின்றி தங்களுக்கு ஏதுவான இணைப்புக்களில் விமானப் பயணத்தை தொடரலாம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7147.77 | 6833.61 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7829.05 | 7466.29 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 24325.88 |

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* கொலோனியல் எம்.ரி.ஆர்.(240.40), மல்வத்த (X) (60.00), கொழும்பு லானட் (25.30), கொழும்பு லான்ட் (W)(20.00), சதோசா மோட்டார்ஸ்(206.90)

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* றிச்சட் பீரிஸ் (12.00), எஸ்.எம்.பி.லீசிங் (X) (1.30), எஸ்.எம்.பி.லீசிங் (1.40), மொரிஷன்ஸ்(1554.60), த பினான்ஸ் கோ (49.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## செல்போனில் பங்கு வர்த்தகம்

இந்தியாவில், செல்போனில் பங்கு வர்த்தகத்தை 33 தரகு நிறுவனங்கள் மூலம் மும்பை பங்குச் சந்தை தொடங்கியுள்ளது.

மோதிலால் ஆஸ்வால், ஏஞ்சல் புரோக்கிங், ஐசிஐசிஐ செக்கியூரிடிஸ் உட்பட இந்தியாவின் 33 முன்னணி பங்குத்தரகு நிறுவனங்களில் கணக்கு வைத்துள்ள முதலீட்டாளர்கள் இந்த வசதியைப் பெறலாம். இன்டர்நெட் வசதி கொண்ட செல்போன் வைத்திருந்தால் தரகு நிறுவனத்தில் பதிவு செய்து ஐ.டி., பாஸ்வேர்ட் பெற்று பங்குச்சந்தை வர்த்தகம் செய்யலாம்.



சிட்டிசன் டிவலப்மன்ட் பினான்ஸ் பினான்ஸ்(CDB), கொழும்பு பங்குச் சந்தையிலுள்ள திரிசவி அட்டவணையில் தமது 39 685 048 பங்குகளை பட்டியலிட்டது. இப் பங்குகள் கடந்த புதன்கிழமை சந்தைக்கு வந்தன. சிடிபி பொது முகாமையாளரும் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான மகேஷ் நாணயக்கார கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் வர்த்தகத்தை ஆரம்பித்து வைப்பதையும்; அருகில் மற்றைய சிடிபி அதிகாரிகள் அவதானிப்பதையும் காணலாம்.

வருகிறது அடுத்த ஐ.பி.ஓ.

# கொழு.பங்குச்சந்தையில் பங்குகளை பட்டியலிட லாப் காஸிற்கு அனுமதி

லா(f)ப் காஸ் (Laugfs Gas) நிறுவனத்தின் பங்குகளை பட்டியல்படுத்துவதற்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனை அனுமதி வழங்கியுள்ளது. லாப்காஸ்நிறுவனம் ஆரம்பபங்கு வழங்கலூடாக தனது மூலதனத்தை 2.5 பில்லியன் ரூபாயால் எரிவாயுவர்த்தகத்தில் அதிகரிக்கவுள் ளது.

இதற்கமைய ரூ.23.00ஆன 75 மில்லியன் வாக்குரிமையுள்ள் பங்குகளையும் ரூ.15.00ஆன 52 மில்லியன் வாக்குரிமையற்ற பங்குகளையும் வழங்கவுள்ளது.

ஒக்டோபர் 14ஆம் திகதியிலிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் ;நவம்பர் 4-ம் திகதியே ஆரம்ப நாள் எனவும் லாப் காஸ் நிறுவனச் செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த மேலதிக தகவல்கலை பங்குபரிவர்த்தனையின் யாழ். கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.91 | 112.51 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 175.73 | 179.43 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.97 | 157.73 |
| சுவிஸ் பிராங் | 113.86 | 117.60 |
| கனேடிய டொலர் | 108.07 | 111.70 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.20 | 111.47 |
| சிங்கப்பூர் டொலர் | 84.46 | 86.56 |
| ஜப்பான் யென் | 1.34 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.53 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.41 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## த பினான்ஸ் கம்பனியை மீள மூலதனப்படுத்த பணிப்புரை

(கொழும்பு)

த பினான்ஸ் கம்பனி பி.எல்.சி. நிறுவனத்தை மீள மூலதனப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ,இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

செலிங்கோ குழுமத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் பலவும் முறிவடைந்தமையின் விளைவாக த பினான்ஸ் கம்பனி இடர்பாடுகளைச் சந்தித்த வேளையில், த பினான்ஸ் கம்பனி பி.எல்.சியை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கிதலையிட்டது.

முகாமைத்துவ முகராண்மையை நியமித்தமை, குறித்துரைக்கப்பட்ட பல பணிப்புரைகளை த பினான்ஸ் கம்பனிக்கு விடுத்தமை என்ப வற்றை உள்ளடக்கியதாக இத் தலையீடுகள் அமைந்திருந்தன. இவ்வழி முறைகள் கம்பனியை வலுப்படுத்துவதற்கு உதவியது.

இந்நிலையில் ,மத்திய வங்கியின் நாணயச் சபை எதிர்காலத்தில் கம்பனியின் சுமுகமான தொழிற்பாடுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு கம்பனியினை மீள மூலதனப்படுத்துவதற்கு இது பொருத்தமான நேரம் என தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒவ்வொன்றும் ரூ.40 கொண்ட 40 மில்லியன் சாதாரண பங்குகள் வடிவில் புதிய மூலதனத்தினை உள்ளீடு செய்வதற்கும், தற்போதைய வைப்பாளர்கள் அவர்களின் வைப்புக்களில் சுமார் 10 சதவீதம் வரையான அளவினை ஒவ்வொரு பங்கும் ரூ.20 என்ற அடிப்படையில் ரூ.100 மில்லியன் கொண்ட வாக்களிப்பற்ற நிதியத்திற்கு மாற்றப்படுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

இந்நடவடிக்கைகளை 2010 டிசம்பர் 15ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எனக்காக மன்னிப்பு கோர வேண்டாம்; குடும்பத்தினரிடம் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

தனக்காக மன்னிப்புக் கோர வேண்டாம் என தனது மனைவியிடமும் பிள்ளைகளிடமும் சரத் பொன்சேகா கூறியுள்ளதாக திருமதி அனோமாபொன்சேகா தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச் சாலையில் சரத்பொன்சேகாவை நேற்று முன்தினம் பார்வையிட்டு திரும்பிய பின் இது தொடர்பாக ஊடகங்களிடம் பேசுகையிலேயே அனோமா பொன்சேகா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தான் தவறு எதுவும் செய்ய வில்லை என்பதால் மன்னிப்புக் கோர தேவையில்லை என சரத் பொன்சேகா கூறியுள்ளதாகவும் அனோமா கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக சத்தியப்பிரமாணம்

மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் சிரேஷ்ட நீதிபதி சிறிஸ்கந்தராஜா மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத் தியப்பிரமாணம் செய்துகொண் டார்.

இது தொடர்பான வைபவம் அலரி மாளிகைளில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உட்பட மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# அம்பாந்தோட்டை துறைமுகம் விரைவில் திறக்கப்படவுள்ளது

(கொழும்பு)

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் எதிர்வரும் நவம்பர் மாதம்18ஆம்திகதிதிறக்கப்படவுள்ளது.

இதனை இலங்கைத் துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகார சபையின் பணிப்பாளர் பிரசன்ன களுத்தரகே தெரிவித்துள்ளார்.

இந்த துறைமுகத்தை கடலுடன் இணைப்பதற்காக கொழும்பு கதிர்காம பழைய வீதியின் சுற்றுப் புறப் பகுதிகள் தோண்டப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத குடியேற்றவாசிகளை தடுக்க பிராந்திய நாடுகளுடன் ஆஸி பேச்சுவார்த்தை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் சட்டவிரோத குடியேறிகளை தடுக்கும் வகையிலான கலந்துரையாடலில் ஈடுபடுவதற்காக அவுஸ்திரேலிய குடிவரவுத் துறை அமைச்சர் கிறிஸ் இவன்ஸ் கிழக்குத்தீமோர் செல்லவுள்ளார்.

இதன் போது அவர் இந்தோனேசியா ,மலேசியா மற்றும் கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகளின் அதிகாரிக்ளுடன் கலந்துரையாடவுள்ளார்.

இந்த சந்திப்பு நாளை திங்கட் கிழமை கிழக்குத் தீமோர் டிலி நகரில் இடம்பெறவுள்ளது. சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழையும் அகதிகள் குறித்த நடவடிக்கைகளில் புதிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த விஜயம் அமையவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது இந்தப் பிராந்தியங்களில் இடம்பெறும் ஆட்கடத்தல் நடவடிக்கைகள் மற்றும் கரையோரப் பாதுகாப்பினை புலப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை அகதி அந்தஸ்துக் கோரி அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் ஏராளமான மக்களை அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் இருந்தே அதிக அளவிலான அகதி அந்தஸ்து கோரி அவுஸ்திரேலியா பிரவேசிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 100 படகுகளில் பயணித்த 5ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்மஸ் தீவில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# டெங்கை கட்டுப்படுத்துவதற்குத் தவறிய 1554 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)


டெங்கை கட்டுப்படுத்த தவறிய நில உரிமையாளர்கள் ஆயிரத்து 554 பேருக்கு எதிராக நீதிமன்ற கடிதத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நோய் ஏற்படக்கூடிய பிரதேசங்களாக 2 ஆயிரத்து 317 இடங்களும் அதிக ஆபத்தான பகுதிகளாக 6 ஆயிரத்து 978 இடங்களும் நேற்று முன் தினம் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஆரம்பமான தேசிய டெங்கு வாரத்தின் கீழேயே இவை அவதானிக்கப்பட்டுள்ளன.

டெங்கு நோய் பரவும் அபாயம் வெகுவாக உள்ள பிரதேசங்கள் பெரும்பாலும் மேலும் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் டெங்கு நோய் கட்டுப்பாடு தொடர்பில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் வீடு வீடாக சென்று பரிசீலிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை தரிசிக்க வந்த கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை படத்தில் காணலாம். (படம்:-சாவகச்சேரி நிருபர்)

# 10.10.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்



- 0680 - முகமது நபியின் பேரன் ஷியா இமாம் உசேன் பின் அலி, காலிப் முதலாம் யாசிட்டின் படையினரால் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார். ஷியா முஸ்லிம்களினால் இந்நாள் ஆஷூராஹ் என அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- 1575 - பிரான்சில் ரோமன் கத்தோலிக்கப் படைகள் புரட்டஸ்தாந்தர்களைத் தோற்கடித்தனர்.
- 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.
- 1631 - சாக்சனி இராணுவத்தினர் பிராக் நகரைக் கைப்பற்றினர்.
- 1780 - கரிபியனில் நிகழ்ந்த பெரும் சூறாவளியினால் 20,000-30,000 பேர் வரை இறந்தனர்.
- 1868 - கியூபாவின் முதலாவது விடுதலைப் பிரதேசம் "லாடெமஹாகுவா" பகுதியில் கார்லோஸ் செஸ்பெடஸ் என்பவர் தலைமையில் அறிவிக்கப்பட்டது.
- 1911 - வூச்சாங் எழுச்சி ஆரம்பமாகியது. இது சிங்வம்சத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சீனக் குடியரசு உருவாவதற்கு வழிவகுத்தது.
- 1916 - வட இலங்கை அமெரிக்க மிஷன் தனது நூற்றாண்டு நிறைவை யாழ்ப்பாணம், பட்டிக்கோட்டா செமினறியில் கொண்டாடியது.
- 1942 - சோவியத் ஒன்றியம் அவுஸ்திரேலியாவுடன் தூதரக உறவை ஏற்படுத்தியது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியரின் பிடியில் இருந்த சிங்கப்பூரில் சிங்கப்பூர் துறைமுகம் மீதான தாக்குதலுக்கு உடந்தையாக இருந்ததாக 57 அப்பாவிகள் ஜப்பானியர்களினால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: 800 ஜிப்சி சிறுவர்கள் அவுஸ்விச் வதைமுகாமில் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1945 - போருக்குப் பின்னரான சீனா குறித்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் குவோமின்டாங்கும் உடன்பாட்டிற்கு வந்தனர். இது இரட்டை பத்து உடன்பாடு என அழைக்கப்படுகிறது.
- 1949 - விடுதலை பெற்ற இலங்கையின் புதிய இராணுவம் உருவாக்கப்பட்டது.
- 1957 - ஐக்கிய இராச்சியம், கம்ப்றியா என்ற இடத்தில் உலகின் முதலாவது அணுக்கரு உலை விபத்து நிகழ்ந்தது.
- 1967 - விண்வெளி தொடர்பாக அறுபதுக்கும் அதிகமான நாடுகள் ஜனவரி 27 ஆம் நாள் கையெழுத்திட்ட உடன்பாடு அமுல்படுத்தப்பட்டது.
- 1970 - பீஜி, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1970 - மொண்ட்றியால் நகரில் கியூபெக்கின் உதவிப் பிரதமரும், தொழிலமைச்சரும் கியூபெக் விடுதலை முன்னணி தீவிரவாதிகளினால் கடத்தப்பட்டனர்.
- 1971 - விற்பனை செய்யப்பட்டு அமெரிக்காவுக்குக் கொண்டுபோகப்பட்ட லண்டன் பாலம் அரிசோனாவின் லேக் ஹவாசு நகரில் மீள அமைக்கப்பட்டது.
- 1986 - 7.5 ரிக்டர் அளவு நிலநடுக்கம் எல்சல்வடோரின் சான்சல்வ டோர் நகரைத் தாக்கியதில் 1,500 பேர் இறந்தனர்.


### பிறப்புகள்

- 1822 - சாமுவேல் ஃபிஸ்க் கிறீன், அமெரிக்க கிறிஸ்தவ ஊழியர், யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்தவர். (இ. 1884)
- 1888 - நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை (இ. 1972)
- 1906 - ஆர்.கே.நாராயண், இந்திய எழுத்தாளர் (இ 2001)
- 1908 - கே.பி.சுந்தராம்பாள், தமிழிசைப் பாடகி, நாடக, திரைப்பட நடிகை (இ. 1980)
- 1913 - கிளோட் சைமன், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 2005)
- 1930 - ஹரோல்ட் பிண்டர், நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் (இ.2008)
- 1936 - கெரார்டு எர்ட்டில், ஜெர்மனிய வேதியியல் அறிஞர்

### இறப்புகள்

- 1659 - ஏபெல் டாஸ்மான், டச்சு கடல் ஆராய்ச்சியாளர், நாடுகாண் பயணி (பி.1603)
- 1973 - பாபநாசம் சிவன், கர்நாடக இசை, தமிழிசை அறிஞர் (பி.1890)
- 1974 - மு.வரதராசன், தமிழறிஞர் (பி.1912)
- 2000 - சிறிமாவோ பண்டாரநாயக்கா, இலங்கையின் பிரதம மந்திரி, உலகின் முதல் பெண் பிரதமர். (பி.1916)

**1987 - விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படையினருக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் போர் ஆரம்பமானது.**



# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

**வலி...**

காயங்களால் வருகின்ற
வலியை விட
காதலால் வருகின்ற
வலி அதிகம்

**தவிப்பு**

ஆயிரம் தடவை
கண்ணாடி பார்த்தேன்
ஒரு முறை அவள் என்னை
பார்ப்பாள் என...

**மௌனம்**

மௌனம் என்பது
சில வேளைகளில் மன்னிப்பு
சில வேளைகளில் தண்டனை

ஜனனி சந்திரலிங்கம்
பருத்தித்துறை



### நட்பின் பிரிவு

அன்பின் நண்பனே நீ
தூரம் சென்றாலும் - நம்
பழகிய நினைவுகள்
என்னருகில் இருந்து
உனை உயிரூட்டுகிறது
பழகும் போது புரியவில்லை
பிரிவின் வேதனை
நான் உன்னுடன்
பழகிக்கொள்ளாமல்
இருந்திருப்பேன்

செல்வராசா விஜிதபாமா
கோண்டாவில்

### இறுதிப் புள்ளி

நீ பேசும்
ஒவ்வொரு வார்த்தையிலும்
முற்றுப்புள்ளி
வைக்கும்போதே எனக்கு
புரிந்தது என்
வாழ்க்கையிலும்
முற்றுப்புள்ளி
நீதான் வைப்பாய் என்பதை

ஜே.என்.நந்தினி
சுழிபுரம்





### வாக்குமூலம்!

யார் நீ...
சாக்கடைப்புழு
சந்தேகப் பிராணி
சத்தியமாய் மனுசனே அல்ல!
துரோகி துச்சாதனன்!
புறாக்கூட்டினுள் புகுந்த கழுகு
பசுந்தோலணிந்த புலி
உனக்கு ஓர் சந்தர்ப்பம்!
நாளை எனக்கு மணமாலை
சூடும் எண்ணமே வேண்டாம்
என் பிணத்துக்கு மலர்மாலை
சூடும் வண்ணம் செய்தேன்!
இப்படிக்கு; நான்!
சிறகொடிக்கப்பட்ட
பட்சிகளில் ஒன்று

பொலிகையூர்
ஸ்ரீ.சுனந்தன்

### இமயம் தொட...



பூவும் காயும் கனியுமென
பூமிக்குத் தருகிறதே மரம்
அதன் கிளை மட்டும்தான்
உன் கண்ணுக்குத் தெரிகிறது
பூவையும் காயையும் கனியையும்
உருவாக்க உழைத்த வேர்களோ
மௌனமாய் மண்ணுக்குள்

மாவை. நா.கஜேந்திரா

### அன்னையவள் உறவு

பூமிதன்னில் ஆயிரம் உறவுகள்
அது ஒரு பூவைப் போன்றது
அத்தனையும் நாளை உதிர்த்திடும்
துன்பம் என்ற நொடிதனிலும்
எமைவிட்டு பிரியும் உறவுகளை விட
என்றும் எப்போதும் நிலையாய் உறவு
அன்னையவள் உறவே...

தர்சன்
கரணவாய்

## மௌனத்தின் தேடல் - 39



தள்ளாடும் வயதிலே
தடியை ஊன்றிக்கொண்டு
என் வீட்டைத் தேடி வந்தேன்
வீடு இருந்த இடத்தை
யுத்தம் எனும் காலன்
தரைமட்டமாக்கிவிட்டானே
இனி நான் என்னசெய்வேன்?

சோ.சுலக்ஷனா
கோப்பாய்

உறவினர்கள் உதறினரோ?
பிள்ளைகளும் பிரிந்தனரோ?
தனிவழிதான் வாழ்வென்று
தனிமைதனை ஏற்றீரோ?

அ.வாசு
கம்பன் கல்லூரி
சாவகச்சேரி

முதுமையை முதுகில் சுமந்தபடி
தொலைந்துபோன இளமையைத் தேடுகிறீரா?
இல்லையேல் பிரிந்துவிட்ட
உறவுகளைத் தேடுகிறீரா?

சிந்துஜா மகேந்திரராசா
சங்கானை

தனியாள் ஆனேன் தவிக்கிறேன்
தக்கதோர் உதவியில்லை
இன்னும் எவ்வளவு நாளோ
இருப்பது இங்கே தனிமையில்?

பா.பாலச்சந்திரன்
மயிலணி

மரணிக்கும் வயதினா
மனிதத்தைத் தேடுகிறாய்
பழுத்த உன் தோற்றம்
பஞ்சாகிப்போன தலை
பாடையிலே போகும்போதுகூட
மனிதத்தை காணமாட்டாய்

இ.லாவண்யா
திருநெல்வேலி

நம்பிக்கை வேர்கள் இன்னும்
நலிவின்றி இருப்பதனால்
முதுமையிலும் தனிமையிலும்
முயல்கின்றீர் வாழ்த்துக்கள்

அ.வைகை வளவன்
கிராம்புவில்

போர் வந்து பேரிடியாக
ஊர் உறவெல்லாம்
ஊரை விட்டோட
ஊர்க் காவலனோ நீ
பார் உன் கடமையைச் சீராய்

மானந்தன்
அல்வை

### உறவுகளைத் தேடி...

யுத்தத்தின் கோரத்தால் - எந்தன்
உறவுகளைப் பிரிந்தேன் - முதுமையிலும்
என்மனம் தளர்ந்துவிடவில்லை
ஊன்றுகோலின் உறுதுணையுடன்
என் வாழ்வைத் தொடர்கிறேன்
உறவுகளைத் தேடியபடி...

வி.அபிஷன்
துன்னாலை

### காலங்கள் தெரிவிப்பது

அன்று !
கைத்தடியுடன்
காந்தி போதித்தது
அகிம்சைப் போராட்டம்
இன்று!
கைத்தடியுடன்
முதியவர் தெரிவிப்பது
வறுமையும்
உறவுகளற்ற நிலையும்

கோவையூர் ரமீ

### பெயர் சொல்ல...!

முத்தாகப் பெற்றெடுத்தாய் பிள்ளைகளை...
உன் பெயர் சொல்ல
மூத்த மகன் ரேஷன் அட்டை
உன் பெயர் சொல்லும்
மூன்றாம் மகள் பதிவட்டையும்
உன் பெயர் சொல்லும்
மூப்படைந்த உன் பெயரை
முதியோர் இல்லமே சொல்லும்

மு.க.பாத்திமா றிஸ்லியா
பலாலி ஆசிரியர் கலாசாலை

சத்தமே உருவான கொடிய யுத்தம்
யுத்தத்தின் பயனாக எங்கும் இரத்தம்
சுற்றத்தை பிரிந்திட்ட முதுமையாளன்
தனிமையில் தவித்திடும் நிலை இதுவோ

சி.டனுசயன்
வட்டக்கச்சி

சுற்றங்கள் சூழ்ந்திருந்த புனித பூமி
யுத்தத்தால் எரிந்ததன்று ஐயோ சாமி
கரைகாணா யுத்தத்தின் கொடுமையிலே
நரைவிழுந்த கூன் கிழவன் தனிமையிலே

கி.சரண்ராஜ்
தாவடி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 40



அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 15.10.2010 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



# எந்திரன்
## the ROBOT




தமிழ் திரையுலகமா இது... என்ற ஆச்சரியத்தை உண்டாக்கியிருக்கும் படம் தான் எந்திரன். ஒரே வட்டப்பாதையில் சுற்றிக்கொண்டிருந்த தமிழ் சினிமாவை ஒரு புதிய பாதைக்கு கொண்டு சென்றிருக்கிறது இந்த எந்திரன். ஏன் இந்த புகழாரம்...என்பதற்கு ஒரே காரணம் இந்த படைப்பை உருவாக்கிய தமிழ் உழைப்பாளிகள்.

பொதுவாக ஒரு படத்தின் விமர்சனம் என்றால் " இதுதான் கதை... இதற்கு பின்னர் என்ன நடக்கிறது" என்று சொல்லலாம். ஆனால் எந்திரனைப் பொறுத்த வரை நீங்கள் விமர்சனத்தை கேட்பதைவிட, இந்த பிரமாண்ட படைப்பை திரையரங்கில் சென்று பார்த்தால் தான் அனைத்து அற்புதங்களையும் உணர்வீர்கள். ஹாலிவுட் படங்களை பார்க்கும்போது, தமிழில் இதுபோன்ற படங்கள் வராதா என ஏங்கிய ரசிகர்களுக்கு எந்திரன் மெகா விருந்தாக அமைந்துள்ளது.

விஞ்ஞானி வசீகரன் தனது உழைப்பால் மனித உருவம் கொண்ட ரோபோவை உருவாக்குகிறார். அதற்கு ' சிட்டி' என்று பெயர் வைக்கிறார். சில காலம் கழித்து சிட்டிக்கு உணர்வையும் கொடுக்கிறார். மனித குணங்களை உணர்ந்த ரோபோ செய்யும் குறும்புகளும், சாகசங்களும் படம் முழுக்க பிரமாண்ட காட்சிகளோடு சொல்லியிருக்கிறார் ஷங்கர்.

கிரிக்கெட் போட்டியில் சேவாக் - காம்பீர் பாட்னர் ஷிப் போல ஷங்கர்-ரஜினியின் பாட்னர் ஷிப் ஒரு இமாலய இலக்கை எட்டியிருக்கிறது.

**கலை இயக்குநர் சாபுசிறில்** - ஒரு விஞ்ஞானியின் ஆய்வுக்கூடம் எப்படியிருக்கும், அவரது வீடு எப்படியிருக்கும், கருத்தரங்கங்கள் எப்படியிருக்கும் என்பதைப் புரிந்து வேலை செய்திருக்கிறார் சாபுசிரில், பாடல் காட்சிகளிலும், சாகசக் காட்சிகளும் தனது செட்டுகளை அமைத்து அசாதாரண காரியங்களை செய்து அசத்தியிருக்கிறார் சாபுசிறில்.

**வசனகர்த்தா சுஜாதா!** - அமரர் சுஜாதாவின் வசனங்கள் எளிமை... ஆனால் ,மகா அர்த்தமுள்ளமைவ, " காதல் வந்தால் ரோபோவிற்கும் நட்டு கழன்றுவிடும்' என ரோபோ சொல்லும் வசனங்கள் அரங்குகளில் கைதட்டல் பெறுகிறது. ஒரு உண்மையான எழுத்தாளர் நினைத்தால் நுளம்புக்கும் வசனம் எழுதமுடியும் என நிரூபித்திருக்கிறார் சுஜாதா.,

மனிதனைப் போல் நுளம்பிற்கும் பேசும் திறமை இருந்தால் இப்படித்தான் பேசியிருக்கும் என ரசிகர்களுக்கு உணர்த்தியிருக்கிறார் சுஜாதா. அவரது உழைப்புக்கு இந்தப் படைப்பு சமர்ப்பணம் என்று தான் சொல்லவேண்டும்.

**ஒளிப்பதிவாளர் ஆர்.ரத்னவேலு** - எந்திரன் போன்ற படைப்பை படப்பிடிப்பாளரின் உருவாக்க இந்த மனிதனின் உழைப்பை பாராட்டியாக வேண்டும். ஒரு படப்பிடிப்பாளரின் பங்கு இவ்வளவு தான் என்று சொல்வதை விட, காட்சிக்கு காட்சி அற்புதமாக உழைத்து தெளிந்த நீரோடை போலகாட்சிகளை கண்ணிற்கு விருந்து படைத்திருக்கிறார் ஆர்.ரத்னவேலு . இயக்குநரின் உணர்வை உள் வாங்கி அதைஅப்படியே வெளிக்காட்டியிருக்கிறார் ரத்னவேலு. பாடல் காட்சியில் தெளிவும் அழகும், சாகசக் காட்சிகளில் பிரமாண்டத்தையும் அற்புதமாக படமாக்கியிருக்கிறார் ரத்னவேலு.

**இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்!** - எந்திரனின் திரைக்குப் பின்னால் இருக்கும் இன்னொரு ஹீரோ என்றால் அது ரகுமான் தான். இந்தப் படத்திற்காக தனது உழைப்பை டபுள் ஆக்கி காட்சிகளுக்கு இசையமைத்துள்ளார் ரகுமான். ஒரு படத்திற்கு பின்னணி இசை எவ்வளவு முக்கியம் என்பதை இந்தபடத்தை பார்த்தால் புரியும்.

குறிப்பாக க்ளைமாக்ஸ் காட்சி நெருங்க... நெருங்க... அவர் ஏற்படுத்திய இசை ஒலிகளும் வியக்கவைக்கிறது. 'புதிய மனிதா பூமிக்கு வா' என்ற டைட்டில் பாடல் தொடங்கி 'அரிமா,அரிமா' பாடல் வரை ரகுமானின் இசை தாளம் போட வைக்கிறது. குறிப்பாக 'பூம்..பூம்.. ரோபோ டா' 'கிளிமாஞ்ரோ' பாடல் குழந்தைகள் முதல் அனைத்து தரப்பினரையும் கவர்கிறது.

தீம் மியூசிக் இசையமைத்த ஏ.ஆர்.ரகுமானிற்கு இன்னொரு ஒஸ்கார் கொடுத்தால்கூட தவறில்லை என்று தான் சொல்லவேண்டும். படத்தின் பாடல்களுக்காகவே தனியாக இன்னொருமுறை பார்க்கலாம் . குறிப்பாக கிளிமாஞ்சாரோ கலக்கல் வெல்டன் ஏ.ஆர்.ரகுமான்.

**ரசூல் பூக்குட்டி** - எந்திரனுக்கான விசேட ஒலிகளை டி.டி.எஸ்ல மிக்ஸ் செய்திருக்கிறார் ரசூல் பூக்குட்டி. ஸ்லம் டாக் மில்லியனர் படத்தில் டி.டி.எஸ் ஒலிகளை வித்தியாசமான முறையில் எழுப்பி அனைவரின் கவனத்தை ஈர்த்த ரசூல் பூக்கூட்டி, எந்திரன் படத்திலும் தன் பாணியைக் கையாண்டு தனது முத்திரையைப் பதித்துள்ளார்.

**நாயகி ஐஸ்வர்யாராய்!** -ஐஸ்வர்யாராய் -ரஜினி சோடி அற்புதமாக பொருந்திருக்கிறது. இவரை விட பொருத்தமான ஒரு ஜோடியை இனி ரஜினிக்கு கண்டுபிடிக்கவே முடியாது. ஷங்கர் ஐஸ்வர்யாவை லேடி சுப்பர் ஸ்டார் என வர்ணித்தது தவறிலை. கோபம், அழுகை,கெஞ்சல், நடனம் என அனைத்திலும் ரஜினிக்கு இணையாக அசத்தியிருக்கிறார்.



**கவிஞர் வைரமுத்து!** - ஷங்கர்- வைரமுத்து -ரகுமான் கூட்டணி மீண்டும் ஒரு வெற்றி கூட்டணி என நிரூபித்துள்ளது. எந்திரனுக்கு பாட்டு எழுதுவதற்காக மூன்று மாதங்கள் தகவல்களை சேகரித்து அசத்தியுள்ளார் வைரமுத்து. குறிப்பாக " அரிமா அரிமா" பாடலில் சிலிக்கான் சிங்கம் என ரஜினியை வர்ணித்த வைரமுத்துவிற்கு ஒரு சபாஷ். எந்திரத்துக்கு காதல் வந்தால் எப்படி இருக்கும் என்பதற்கு வைரமுத்துவின் வரிகள் ஒரு சிறந்த உதாரணம்

**இயக்குநர் ஷங்கர்!** - 'பத்து வருட உழைப்பு, அதற்கு பலனே இல்லையா' எந்திரன் படத்தில் ரஜினி பேசும் வசனம் இது. ஆனால் ஷங்கருக்கு பலன் கிடைத்துவிட்டது. பத்துவருடமாக தனது கனவுப் படத்தை மெருகுப்படுத்திய ஷங்கரின் உழைப்பை எப்படிப் பாராட்டுவது, வார்த்தைகளே இல்லை ஷங்கர். ஒரு தமிழன் எப்படிப்பட்ட கதையும் எடுக்கமுடியும் என ஷங்கர் நிரூபித்துள்ளார். சர்வதேச அளவில் ஒரு தமிழனால் இப்படியும் எடுக்க முடியுமா என்ற தடையை உடைத்துவிட்டார் ஷங்கர். தனது கற்பனைக்கு ரஜினி மூலம் உயிர் கொடுத்து அழகு பார்த்திருக்கிறார் ஷங்கர்.

ஷங்கரின் அசுர உழைப்பு படத்தின் காட்சிகள் மூலம் தெரிகிறது. இந்தியாவில் மீண்டும் இந்தப் படம் போல் வருமா.. சான்ஸே இல்லை. சுப்பர் ஷங்கர். பஞ்ச் டயலொக் இல்லாத, இயல்பான ரஜினியைப் பார்க்கமுடிகிறது. இயக்குநர் ஷங்கருக்கு நன்றிகள். இந்த படம் சர்வதேச அளவில் விருதுகள் குவிக்கும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

இறுதிக் கட்டத்தில் எந்திரன் படத்தை தனது திரைக்கதை மூலம் விறுவிறுப்பாகவும், சீட் நுனியில் அனைவரையும் உட்கார வைத்திருக்கிறார் ஷங்கர். இந்தப் படைப்பாளியின் உழைப்பிற்கு ஷங்கர் சூப்பர்.

**சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்!** - சந்தர்ப்பமே இல்லை என்ன சொல்வது இந்த மனிதனின் உழைப்பை,ரஜினியின் நடிப்புக்கு இந்த முறை தேசிய விருது நிச்சயம். எந்தப் படத்திலும் இல்லாத அளவுக்கு அழகாக இருக்கிறார் ரஜினி . இந்த மனிதரை இதற்கு முன் யாருமே இத்தனை அற்புதமாகக் காட்டியதில்லை. விஞ்ஞானியாக நடிக்கும் போது தனது நடிப்பின் அனுபவத்தை வெளிக்காட்டியிருக்கிறார்.

அதே ரஜினி,சாதுவான ரோபோவிற்கும் விஸ்வரூப ரோபோவிற்கும் நடிப்பு மூலம் வேறுபடுத்தி நடிப்பில் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளார். சுப்பர் ஸ்டார். விஸ்வரூப ரோபோவாக ரஜினி செய்யும் நடிப்பை வர்ணிக்க வார்த்தை இல்லை. பஞ்ச் டயலொக் இல்லாத ரஜினி ஸ்டைல் மேனரிஸங்கள், அதிரடி அறிமுகக்காட்சி, எதுவுமே இல்லாமல் இயக்குநர் ஷங்கரின் உணர்வுகளை உள்வாங்கி அப்படியே வெளிக்காட்டியிருக்கிறார் ரஜினி. பஞ்ச் டயலொக் இல்லாமல் அதற்கெல்லாம் வட்டியும் முதலுமாகச் சேர்த்து இரண்டு பாதியில் மிரட்டியிருக்கிறார் ரஜினிகாந்த்.

ஒன்றுமறியாத ஒரு குழந்தையின் மனநிலையில் உள்ள ரோபோ எப்படியிருக்கும்... வில்லத்தனத்தின் மொத்த உருவம் எப்படி இருக்கும்... அத்தனைக்கும் ஒரே விடை ரஜினி எந்திரனில் செய்துள்ள வேடங்களே. பாராட்டுக்கள் ரஜினி.

மொத்தத்தில் எந்திரன் தமிழ் சினிமாவை சர்வதேச அளவில் தலைநிமிரச் செய்துள்ளது.





# ரம்லத் பிரபுதேவா ஆர்ப்பாட்டம் –நயன்தாரா கைது...?

தமிழ் நாட்டில்ஏதோ ஒரு மூலையில் இருக்கும் கிராமத்துக்காரர் முதல் இந்தியாவின் பெரிய நகரத்தில் இருப்பவர் வரை அனைவரும் இன்று விவாவதிக்கும் சர்ச்சை பிரபுதேவா நயன்தாரா திருமண விடயம்தான்.

இந்த விவகாரம் தென்னிந்திய திரைவட்டாரத்தையே இன்று பரபரப்பாக்கி வருகிறது. அரசல் புரசலாக கிசுகிசுக்கப்பட்டு வந்த இவர்கள் பிரச்சினை.... நயன்தாராவுடனான திருமணம் பற்றி கடந்த மாதம் பிரபுதேவா பேட்டி அளித்ததில் இருந்து சூடுபிடிக்க ஆரம்பித்தது.

அதுவே இன்று நயன்தாராவின் போஸ்டருக்கு மகளிர் அமைப்பினர் தீவைத்து எரித்து போராட்டம் நடத்தும் அளவுக்கு படுவேகமாக கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் இதுவரை மௌனமாக இருந்த ரம்லத்தும் இப்போது ஆர்ப்பாட்டம் செய்து வழக்கும் தொடுத்துவிட்டார்.

தமிழ் நாட்டில்தான் இப்படி என்றால் ஆந்திராவில் இன்னும் காரசாரமாகிவிட்டது இந்தப் பிரச்சினை.

அண்மையில் சவுத் ஸ்கோப் பத்திரிகை சினிமாக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில் சிறந்த ஜோடி (தம்பதியர்) என்னும் விருதை பிரபுதேவா நயன்தாரா இருவருக்கும் வழங்கி இந்தப் பிரச்சினையில் நெய்யை ஊற்றி விட்டது. இதனால் திருமணமே ஆகாமல் கள்ளத் தொடர்பு வைத்திருப்பவர்களுக்கு சிறந்த ஜோடி விருதா? என்ற சாடல்களும் எழுந்தன. இந்தப் பிரச்சினை ஒயும் முன்னே இன்னொரு சிக்கலும் சிக்கெடுக்கத் தொடங்கியது தெலுங்கு திரையுலகில். பாலகிருஷ்ணா ராமராக நடிக்கவிருக்கும் ஸ்ரீ ராம ஜெயம் என்னும் படத்தில் சீதையாக நயன்தாரா நடிப்பதாக இருந்தது.

இன்னொரு பெண்ணின் வாழ்க்கையை கெடுத்த நயன்தாரா சீதையாக நடிப்பதா...? என ஆவேசத்தின் உச்சத்திற்கே போய்விட்டது தெலுங்குத் திரையுலகம். கடைசியில் இந்தப் படத்திலிருந்தே நீக்கப்பட்டார் நயன்.


அந்தப் படத்தில் நடிக்க தடை ஏற்பட்டது போல நயன்தாரா பிரபுதேவா சேர்ந்து ஊர் சுற்றுவதற்கும் இப்போது தடை ஏற்படப்போகிறது.

இவ்வளவு பிரச்சினைகள் பூகம்பமாக வெடித்துவரும் நிலையில் எத்தனை தடங்கல்கள் வந்தாலும் நயன்தாராவுக்கும் எனக்குமான திருமணம் டிசம்பரில் நடப்பது உறுதி என்று கூறிவிட்டார் பிரபுதேவா.

இதனால் இதுவரை பொறுத்துப் பொறுத்து பார்த்த ரம்லத் இருவர் மீதும் சென்னை முதன்மை குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து விட்டார்.

இது குறித்து அவர் அளித்த மனுவில், நயன்தாராவும் பிரபுதேவாவின் கும்பத்தினரும் இந்த இரண்டாம் கல்யாணத்திற்கு என்னை வற்புறுத்தி மிரட்டுகிறார்கள். இதனால் நான் மிகுந்த மன உலைச்சலுக்கு ஆளாகியிருக்கிறேன். நயன்தாராவை பிரபுதேவா திருமணம் செய்து கொண்டால் அவரையே நம்பி வாழும் எனக்கும் என் குழுந்தைகளுக்கும் வாழ்க்கையே பிரச்சினையாகி விடும்.

இதனால் டிசம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள அவர்களின் திருமணத்தை தடுத்து நிறுத்த வேண்டும். இந்த வழக்கு முடியும் வரை அவர்கள் இருவரும் உல்லாசமாக ஊர் சுற்றவும் பத்திரிகைகளுக்கு பேட்டி அளிக்கவும் சேர்ந்திருந்து புகைப்படம் எடுத்துக்கொள்ளவும் தடை விதிக்க வேண்டும்.



மேலும் அவர்கள் தங்களை கணவன் மனைவி என்று அறிவிக்கவும் தடை விதிக்க வேண்டும் இப்படி அதில் குறிப்பிட்டிருந்தார் ரம்ரத்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி மீனாட்சி சுந்தரம் நயன்தாராவுக்கும் பிரபுதேவாவுக்கும் இது குறித்து விளக்கம் அளிக்குமாறு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இந்த வழக்கு குறித்து பிரபுதேவா - நயன்தாரா என்ன விளக்கம் கொடுக்கப் போகிறார்கள்...? ரம்லத்துக்கு அவர்கள் இருவரும் செய்த துரோகத்திற்கு அவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும்....? என்பதுதான் அனைவரின் கேள்வி

இதறகான விடை...




# உள்ளத்தைச் செம்மைப்படுத்துவதன் மூலம் எமது வாழ்க்கையை நன்னிலைப்படுத்துவோம்



உள்ளம் பெருங்கோயில் என்றார் திருமூலர். உள்ளுதல் என்றால் நினைத்தல் என்று பொருள்படும். நினைத்தல் என்ற தொழிலைச் செய்பவன் மனிதன். அவனிடம் இருப்பது உள்ளம். இன்றும் மனம்பற்றிய, உளம்பற்றிய கல்வியும் ஆராய்ச்சியும் வளர்ச்சி கண்டு வருகின்றது.மனிதன் மனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கின்றான் என்பது இதன் பொருள்.

இதன் அடிப்படையில் உடம்பில் ஏற்படும் பல விளைவுகளுக்கு உள்ளம் காரணமாக இருப்பதைக் கண்டு உடலுக்கும் உள்ளத்திற்கும் -உள்ளத்திற்கும் உடலுக்கும் இடையில் ஓர் இறுக்கமான பிணைப்பு இருப்பதை உணர்ந்து வெறும் நோயற்ற நிலை தான் ஆரோக்கியம் என்ற நினைப்பை மாற்றி வெறுமனே நோயற்றிருப்பதோ அங்கவீனம் அற்றிருப்பதோ ஆரோக்கியம் அல்ல, உடல் உள சமூக நன்னிலை அடைதலே ஆரோக்கியம் எனப்புரிந்து இந்த நன்னிலையை - ஆரோக்கியத்தை அடைவதற்கு உள்ளத்திற்கு உதவுவது ஆன்மீகம் என்பதால் அதனையும் சேர்த்து வரைவிலக்கணத்தை உருவாக்கி தற்பொழுது வரை அதனையே பின்பற்றி வருகின்றான்.

இந்த முன்னேற்றம் நடந்திருப்பதை ஒரு சிலர் மாத்திரம் அறிந்து நல்லபடி வாழ முயற்சிக்கின்றனர். பலருக்கு இவ்விடயங்கள் தொடர்பான அறிவு இருந்தாலும் சமூக நாணம் என்ற வலைக்குள் சிக்குண்டு வெளி வரமுடியாமல் இருக்கின்றனர். உடலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப்போல உள்ளத்துக்கும் முக்கியத்துவம் தருவதற்குத் தயங்குகின்றனர். உடலுக்கு ஒரு பிரச்சினை என்றால் அதற்குரிய மாற்றத்தை அறிந்து செயற்படுத்துவதில் காட்டும்வேகத்தை தனது உள்ளத்தைப் பிரச்சினையில் இருந்து விடுவிப்பதற்கும் செம்மைப்பத்துவதற்கும் பயன்படுத்துவதில்லை.ஏன் அதனைச் செம்மைப் படுத்த வேண்டும் என்று கேட்கின்றனர்.

உடம்பில் ஒரு நோய் வந்தால் மனம் பல எதிரான எண்ணங்களை உருவாக்கி தானும் துவண்டு விடு கிறது. அதுபோல மனதில் ஒரு கவலையோ துன்பமோ, குடி கொண்டு விட்டால் அது உடம்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த இரு வகையான நிலைக்கு உட்பட்டு துன்புறுவது எமது நாளாந்த வாழ்க்கயின் அனுபவமாக இருக் கிறது.

எமது இன்றைய வாழ்க்கை முறையில் நாம் பயன்படுத்தும் உணவு தொடங்கி கையில் இருக் கும் தொலைபேசி வரை உடலையும் மனத் ·தையும் பாதிக்கின்றவையாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. எமது வாழ்க்கையோ இயந்திரம்போல

## இன்று சர்வதேச உளநல தினமாகும்

வேகமாக நகர்கின்றது.இது எமது நீண்ட வாழ்க்கைக்குச் சவாலாக இருப் பதை நாம் உணர மறுகின்றோம். கடந்த ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்டல் 45 வயதினைக் கூட எட்டாத 403 பேர் மரணம் அடைந்தார்கள். இதில் 91 வீதம் பேர் வேலைப்பளுவினால் வந்த மன அழுத்தத்தினாலேயே இறந்தார்கள் என்பது கசப்பான உண்மையாக இருக்கிறது.

இத்தகைய வாழ்க்கை முறையால் மனத்தில் ஏற்படும்பல நெருக்கடிகளால் எமது சிந்தனைகள் எதிரான சிந்தனைகளாக மாற்றப்படுவதற்குரிய சாத்தியங்கள் இருக்கின்றன. இந்தச் சிந்தனை மாற்றத்தால் எமது மனம் அழுத்தத்தைச் சந்திக்கின்றது. இது எமது உடலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனத்தில் ஏற்படும்அழுத்தத்தால் உடலில் ஏற்படும்நோய் நிலைமையை உளவியலாளர்கள் 'மெய்பாட்டு' நோய்கள் எனக் கூறுவர். எம்மிடம் உளவளத் துணைக்கு வருபவர்களில் பலர் இம்முறைப்பாடு களையே கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இம் மன அழுத்தங்கள் எம்மில் காணப்படும் சில உடல் சார்ந்த பிரச்சினைகளை (சலரோகம், அல்சர், எக்ஸிமா) அதிகரிக்கச் செய்கின்றன. அத்தோடு இத்தகைய உடல் நோய்கள் ஒருவரில் ஆரம்பிக்கின்ற போது இந்நோய்கள் தொடர்பான ('மாற்றமுடியாத வருத்தம் எனக்கு வந்திட்டுது', 'நான் வருத்தக் காரன் ஆகிவிட்டேன்' போன்ற) எதிரான எண்ணங்களும் இவர்களுக்கு மனஅழுத்தத்தை ஏற்படுத்தி இவர்களது உடல்நோயை அதிகரிக்கின்றன. இதைப் பலர் உணர்வதில்லை.

உடலில் உண்மையாகவே (மெய்ப்பாடுகள் அல்லாத) நோய் ஏற்பட்டிருப்பினும் அந்த நோயினைக் குணமாக்கும் தன்மை மனத்திலும் தங்கியுள்ளது. தீர்க்கமுடியாத நோய்கள் எனக் கருதப்படும் நோய்களுக்கு உட்பட்டிருப்பவர்கள் கூடத் தம்து வாழ்நாள்கள் வரையறுக்கப்பட்ட நிலையிலும் தமது மனத்தினை எவ்வாறு செம்மைப்படுத்தி அழுத்தமில்லாமல் வைத்திருக்கிறார்கள் என்பதைப்பொறுத்து அவர்களின் வாழ்நாள் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதை நாம் பல உதாரணங்கள் மூலம் கண்டிருக்கிறோம் ; அறிந்திருக்கின்றோம்.

அண்மையில் ஓர் ஆராய்ச்சிக் குறிப்பொன்றில் மார்பகப் புற்றுநோய் வந்தவர்களை ஆய்வுசெய்து "மார்பகப் புற்றுநோய் வந்த அத்தனை பெண்களினுடைய வாழ்க்கைமுறை, அவர்களின் எண்ண ஓட்டம் போன்றவை பற்றி ஆராய்ச்சி செய்தோம்.

மார்பகப் புற்றுநோய் உருவாகுவதற்கு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே, அந்தப் புற்றுநோய் வந்த அத்தனை பேரின் எண்ண ஓட்டமும் எதிர்மறையான எண்ண ஓட்டமாக இருந்தது.ஆய்வு செய்த 100 பேரில் 98 பேர் 10 ஆண்டுகளுக்கு முன்னரே யுற்றுநோயை வரவழைக்கும் எதிர்மறையான மன அமைப்பை உருவாக்கியிருந்தனர்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

முன்னர் சொன்ன ஆரோக்கியத்தைப் பற்றிய வரைவிலக்கணத்தின் படி உடல், உள , சமூக மற்றும் ஆன்மீக நன்னிலை அடைதல் என்ற படிநிலை இருக்கிறது. இவற்றில் உடலையோ சமூகத்தையோ ஆன்மீகத்தையோ முதன்மையாகச் சொல்லிவிட முடியாது. காரணம் உடலைச் செம்மையாக வைத்திருத்தல் எனும்போது அதனோடு உளம் தானாகவே இணைகின்றமைவெளிப்படை.

சமூகம் என்பது தனிநபர் பலர் சேர்வது. எனவே அதனை செம்மைப்படுத்த வேண்டுமெனில் அதுவும் தனிநபரைச் செம்மைப் படுத்துவது என்பதையே சார்கின்றது; தனிநபர் என்னும் போது அது அவரது உள்ளத்தைச் செம்மைப்படுத்தல் என்ற நிலைக்கே இட்டுச்செல்கின்றது.ஆன்மீகம் என்பதும் ஒரு நபர் சார்ந்த அவரது உளம் சார்ந்த ஒரு விடயம்- மனித உள்ளத்தைச் செம்மைப் படுத்தும் ஒரு கருவி. இதன் அடிப்படையில் நோக்கும்போது இங்கு உளம் என்பது முதன்மை நிலை பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது.

" உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன், உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே' (திருமூலர்) என்ற பாடல் வரிகளில் உடம்பை வளர்க்கும் என்ற வரி சிந்தனைக் குரியது. அந்த உபாயம் என்ன? எளிமையாகச் சொன்னால் உள்ளத்தைச் செம்மையாக்குவதே அந்த உபாயம். திருமூலர் உள்ளத்தைச் செம்மையாக்க ஆன்மீகத்தையே கருவியாகக் கொண்டு அதன் மூலம் உடலை நன்கு வளர்த்து உயர்வு பெற்றார் என்று அறிகின்றோம்.

முதன்மை பெறும் இந்த உள்ளத்தை செம்மைப்படுத்தும் ஒரு கருவியாக ஆன்மீகம் இருக்கிறது. இதனைவிடப் பிரச்சினைகள் வரும்போது அதனை "எங்கள் பல்லைக் குத்தி மற்றவருக்கு ஏன் மணக்கக் கொடுப்பான்" என்று எண்ணாது நம்பிக்கைக் குரியவரோடு மனந் திறந்து பகிர்ந்து கொள்ளுதல், நல்ல இசையைக் கேட்டல், இனிய புத்தகங்களை வாசித்தல், விளையாடுதல், நாடகம் (தொலைக்காட்சி நாடகம் அல்ல) , நடனம் போன்ற கலைகளை இரசித்தல் அதனில் ஈடுபடுதல், நல்லவர்களுடனான சேர்க்கை, நகைச்சுவையை இரசித்து மனம் விட்டுச் சிரித்தல் போன்றனவும் எமது உள்ளத்தைச் செம்மையாக்கும் கருவிகளாகத் தொழிற்படவல்லன.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் உள்ளத்தைச் செம்மையாக்கினால் எமது வாழ்வு புதிய பாதையில் பயணிக்கும். இதற்கு சிலருக்கு நேரத்தைக் கண்டுபிடிப்பது சிக்கலானதாக இருக்கலாம். அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். வாழ்க்கையில் நாம் எப்போதும் நாண் ஏற்றிய வில்லுப் போல இருந்தால் அது பிரச்சினையாகி விடும்.வில்லைத் தேவைப்படும் போது மட்டுமே நாண் ஏற்றிப் பின்னர் அதனைத் தளர்த்தி வைக்க வேண்டும். அப்பொழுது தான் அதனைத் தேவைப்படும் போது பயன்படுத்த முடியும்.

**நா.நவராஜ் ,**
உளவளத்துணையாளர் (பல்துறைசார் சிகிச்சை குழு)
உளநல சிகிச்சைப் பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை.

எமது மனத்துக்கும் இந் நடைமுறைக்கு நன்கு பொருந்தும். மனம் தெளிவாக நலமாக இருந்தால் உடலுக்கு வரும் பிரச்சினைகள் குறையும். நோய் நிலையுற்றாலும் " நோய் கூட ஒரு வரம்." என்று ஜென்னின் அருமையான வாக்கியத்தைச் சொல்லமுடியாவிடினும் தளர்வறியா மனம் இருக்கும். சமூகத்தோடு நல்ல உறவினை வளர்த்துக் கொள்ள முடியும். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு எமது வாழ்க்கையை நன்னிலைப் படுத்த முயலுவோம். மனதினைக் காத்து மாண்புற வாழ்வோம்.

---

# தொலைக்காட்சி நடிகையின் வீட்டிலிருந்து கைக்குண்டுகள், தோட்டாக்கள் மீட்பு

(கொழும்பு)

தொலைக்காட்சி நடிகை ஒருவருக்கு சொந்தமான பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் குளியலறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு, இரண்டு ரி 56 ரக மெகசீன்கள் மற்றும் தோட்டாக்கள் என்பவற்றை மிரிஹான பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நுகேகொட பிராந்தியத்தில் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னகோனுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இவை கைப் பற்றப்பட்டுள்ளன. நடிகையை பொலிஸாரிடம் சிக்க வைப்பதற்காக திட்டமிட்ட குழுவொன்று ஆயுதங்களை நடிகை வீட்டில் மறைத்து வைத்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே இந்த நடிகை ஒருவர் தன் னை அச்சுறுத்தி வருவதாக நுகேகொட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்திருந்தார். (ஸ்ரீ-2)

# இலங்கை பங்குச்சந்தையில் பாரிய வீழ்ச்சி

## கொழும்பு தகவல்கள் தெரிவிப்பு

இலங்கை பங்குச்சந்தையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்தவாரம் 6.0 விகித வீழ்ச்சி காணப்பட்டதாகவும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது பங்குகளை அதிகம் விற்பனை செய்துள்ளதாகவும் அவை மேலும் தெரிவித்துள்ளன.

282.7 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான பங்குகளை வெளிநாட்டு நிறுவனங்கள் இதுவரை விற்பனை செய்துள்ளன. இந்த வருடத்தில் அவை 17.5 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான பங்குகளை விற்பனை செய்துள்ளன.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதியும் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. ஒரு டொலர் 111.70 ரூபாய்களாக விற்பனை செய்யப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# சூரியனின் வெப்ப ஒளிக்கற்றைகள் பூமியை குளிர்ச்சியடைய செய்கின்றன

## புதிய ஆராய்ச்சியில் தகவல்

(லண்டன்)

காலநிலை மாற்றத்தின் பின்னணியில் புவி வெப்பமடைந்து வந்தாலும் அதிகரித்து வரும் சூரியனின் வெப்ப ஒளிக்கற்றைகள் செயற்பாட்டினால் உண்மையில் பூமி குளிர்ச்சி அடையச் செய்வதாக புதிய ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

சூரியனுக்கும் பருவநிலை மாற்றத்துக்கும் உள்ள தொடர்பு குறித்து கடந்த 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஆராய்ச்சி மேற்கொண்டதால் புவி வெப்பமடைதலுக்கு அதிகரித்து வரும் மனிதனின் செயற்பாடுகள் தான் காரணம் என தெரியவந்துள்ளது.

கடந்த 11 ஆண்டுகளில் சூரியனின் வெப்ப ஒளிக்கற்றைகளின் சுழற்சியினால் பனி மலைகள் உருவாகி வருகின்றன. நதிகள் வறண்டு போயும் உள்ளதாக இயற்கை மாற்றம் குறித்த ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் லண்டனைச் சேர்ந்த ஜோன்னா ஹெயாக இம்பீரியல் கல்லூரி வெளியிட்ட ஆய்வறிக்கையில்,

அதிகரித்து வரும் சூரிய வெப்ப ஒளிக்கற்றைகளால் உண்மையில் பூமி குளிர்ச்சியாகிறது என இதனை கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொண்ட ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த ஆராய்ச்சி முடிவினை தெளிவாக உறுதிப்படுத்த முடியாது.

எனினும் மேலும் தீவிர ஆராய்ச்சி முடிவினை மேற்கொண்டு வருவதாகவும் இதற்கு நீண்ட நாட்கள் தேவைப்படும் எனவும் டெலிகிராப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நடிகர் எஸ்.எஸ்.சந்திரன் மாரடைப்பால் காலமானார்

சினிமா நகைச்சுவை நடிகரும் அ.தி.மு.கவின் கொள்கை பரப்புச் செயலாளருமான எஸ்.எஸ். சந்திரன் மாரடைப்பால் காலமானார்.தற்போது அவருக்கு வயது 69 ஆகும்.


திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அருகேயுள்ள இடும்பாவனம் என்ற கிராமத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசி விட்டு நடிகர் எஸ்.எஸ்.சந்திரன் நேற்று முன்தினம் இரவு 12 மணிக்கு மன்னார் குடியில் உள்ள பூர்ணா விடுதியில் தங்கினார். நள்ளிரவு ஒரு மணியளவில் எஸ்.எஸ். சந்திரனின் உதவியாளர் மாத்திரை கொடுப்பதற்காக அவரை எழுப்பியுள்ளார்.அப்போது அசைவற்றிருந்த எஸ்.எஸ்.சந்திரனைக் கண்டு அதிர்ச்சியடைந்த உதவியாளர் கட்சி நிர்வாகிகளுக்கு தெரிவித்துள்ளார்.உடனடியாக அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் எஸ்.எஸ்.சந்திரனை அனுமதித்துள்ளனர்.

அங்கு எஸ்.எஸ்.சந்திரனை பரிசோதித்த மருத்துவர்கள் ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். எஸ்.எஸ்.சந்திரன் உடல் சென்னை கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் அவரது வீட்டில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுகிறது.

மாநிலங்களவை உறுப்பினராக இருந்த எஸ்.எஸ். சந்திரன் 100 க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

மேலும் சந்திரனின் உடலுக்கு அ.தி.மு.கவினரும் திரையுலகினரும் அஞ்சலிசெலுத்தி வருகின்றனர்.இவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி வருகின்றனர்.



69 வயதாகும் நடிகர் எஸ்.எஸ். சந்திரன் 1986 ஆம் ஆண்டு பாலைவன ரோஜாக்கள் மூலம் சினிமா உலகிற்கு அறிமுகமானவர். இவர் பாட்டி சொல்லைத் தட்டாதே, மாப்பிள்ளை, உழைப்பாளி, ஆத்தா உன் கோவிலிலே, சின்னப்பதாஸ், காக்கைச்சிறகினிலே, கதாநாயகன்,நாடோடி பாட்டுக்காரன், தங்கைக் கோர் கீதம்,வண்டிச்சோலை சின்னராசு, தங்கமான புருஷன், உனக்காக எல்லாம் உனக்காக,உயிருள்ள வரை உஷா,காதல் ரோஜாவே,ஒன்ஸ்மோர்,புதிய மன்னர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் அதிகமானபடங்களில் நடித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# புகலிடம் தேடி வருபவர்களுக்கு நகராட்சி வீடுகள் இனி இல்லை

## பிர்மிங்ஹாம் மாநகராட்சி அறிவிப்பு



புகலிடம் நாடிவரும் அகதி மக்களுக்கு நகராட்சி வீடுகள் அளிப் பதில் முன்னுரிமை தர முடியாது என பிரிட்டனின் மிகப் பெரிய நகராட்சிகளில் ஒன்றான பிர்மிங்ஹாம் நகராட்சி நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

நகராட்சி வீடுகள் வழங்குவதில் இனி அந்தப் பகுதியிலேயே வாழும் மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அறிவிப்பு வெளியாகி யுள்ளது. பொருளாதார சீரழிவு நிலையைத் தொடர்ந்து நாட்டு மக்கள் பலரே வசிக்க இருப்பிட மின்றித் தவிக்கும் போது புகலிடம் நாடி வரு பவர்களுக்கு வழங்குவது இயலாத காரியம் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. தற்போது 200 வீடுகள் புகலிடம் நாடி வந்த மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டன் எல்லைப் பாதுகாப்பு அமைப்பு அனுப்பிய பல வீடுகளுக்கான விண்ணப் பங்களை இரத்து செய்வதாக அப்பகுதி கவுன்சிலர் ஜான் லயன்ஸ் கூறியுள்ளார்.

பிர்மிங்ஹாம் நகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் இருந்து வீடுகளுக்காக 8ஆயிரம் விண்ணப்பங்கள் வரக்கூடும் என எதிர்பார்ப்பதாகவும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டிய நிலைஇருப்பதால் அகதி மக்களுக்கு தர முடியாது என்பதையும் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஆப்கானிஸ்தானில் குண்டுவெடிப்பு ஆளுநர் உட்பட 15பேர் பலி

(காபூல்)




ஆப்கானிஸ்தானில் குண்டூஸ் மாகாணத்தில் உள்ள மசூதி ஒன்றில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இந்தக் குண்டுவெடிப்பில் மாகாண ஆளுநர் உட்பட 15பேர் பலியாகியுள்ளனர். குண்டூஸ் மாகாண ஆளுநர் முகமது உமர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடந்த தொழுகைக்குச் சென்ற போது அங்கு நடந்த குண்டுவெடிப்பில் பலியாகி இருப்பது தெரியவந்துள்ளது.

இருப்பினும் குண்டு வெடிப்பிற்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. (ஸ்ரீ-2)

# அணுகுண்டுகளை தாங்கியபடி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை

## ரஷ்யா வெற்றிகரமாக பரிசோதனை

(மொஸ்கோ)



ரஷ்யா புலாவா என்ற புதிய ஏவுகணையைச் சோதனை நடத்தியது. இது கண்டம் விட்டு கண்டம்150 கிலோதொன் அணுகுண்டுகளை தாங்கியபடி 8ஆயிரம் கி.மீ. தூரம் பாய்ந்து சென்று தாக்கக்கூடியது. இந்த ஏவுகணை சோதனை காம்சாத்கா தீப கற்பத்தில் வைத்து நடத்தப்பட்டது.

ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.ரஷ்யா இராணுவம் இந்த ஆண்டு ஏற்கனவே 3ஏவுகணைகள் சோதனை நடத்தியுள்ளது. அவற்றில் 2 நீர்மூழ்கிக் கப்பலை தாக்கக்கூடியதாகும். தற்போது வெற்றிகரமாக ஏவப்பட்ட புலாவா ஏவுகணை மேலும் பல பரிசோதனைகளுக்குபின் இராணுவத்தில் சேர்க்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)


# இந்தோனேசியாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் இருவர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் வடக்கேயுள்ள மொலுக்காஸ் தீவில் நேற்று முன்தினம் பகல் 12.43 மணியளவில் கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டது.இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து உடனடியாகத் தெரிய வில்லை.

டெர்னேட் என்ற நகரத்திற்கு அருகே வடகிழக்கு திசையில் பூமிக்கு அடியில் 110 கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்த தகவல் உடனடியாகத் தெரியவர வில்லை. (ஸ்ரீ-2)



செம்மண் குவியல் போன்று தெரிகிறதே என நினைக்கவேண்டாம். செவ்வாய்க்கிரகத்தின் குறைந்த தாழ்வழுத்தத்தில் அடந்த பள்ளத்தாக்குப் பகுதிதான் இது. இதனை ஐரோப்பிய விண்வெளி ஆய்வுமையம் புகைப்படம் எடுத்துள்ளது.

# சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகங்களில் காய்கறிகள் விளைவிப்பது சாத்தியமா?

## விஞ்ஞானிகள் விளக்கம்

(மும்பை)

சந்திரன் மற்றும் செவ்வாய்க் கிரகங்களில் காய்கறிகளை விளைவிக்க முடியும் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியில் நிலவும் தட்பவெப்பநிலைகள் மற்றும் சூழ்நிலைகளை தவிர வேற்று கிரகங்களில் காய்கறிகளை விளைவிப்பது குறித்து அமெரிக்காவை சேர்ந்த அரிசோனா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தீவிர ஆய்வு மேற்கொண்டனர்.

இதற்காக அவர்கள் ''கிரீன் ஹவுஸ்'' என்ற பிரத்தியேக ஆய்வுகூடம் ஒன்றை அமைத்தனர்.

இது ஆய்வகம் குறித்து விஞ்ஞானி பில் சாட்லர் கூறுகையில், கிரீன் ஹவுஸ் ஆய்வகத்தில் காற்று, தண்ணீர் மற்றும் சாதாரண சூழ்நிலைகள் இருக்காது . சந்திரனில் நிலவும் தட்பவெப்பநிலைகளை மனதில் கொண்டு அமைக்கப்பட்டது. அந்த ஆய்வகம் முழுவதும் 18 அடிநீளம் கொண்ட குழாய்கள் அமைக்கப்பட்டு, மேல்புறம் சிறு சிறு துளைகள் அமைக்கப்பட்டன.

அதில் சிறிய சோடியம் விளக்குகள் பொருத்தப்பட்டு, குழாய்களில் காய்கறி விதைகள் நிரப்பப்பட்டன. 10 நிமிடத்திற்கு ஒரு முறை சோடியம் விளக்குகள் ஒளிர செய்து அணைக்கப்பட்டன. மேலும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும், குழாய்க்குள் தண்ணீர் பாய்ச்சப்பட்டது.

என்ன ஆச்சரியம்? 30 நாட்களில் அதிலிருந்த விதைகளிலிருந்து மொட்டுக்கள் துளிர் விட்டு, மேலிருந்த துவாரம் வழியாக வெளியே வர ஆரம்பித்தன. இந்த முறையை வேற்றுக்கிரகங்கள் மட்டுமன்றி, மக்கள் நெருக்கம் மிகுந்த நரகங்களிலும் அமைத்து காய்கறி விளைவிக்க முடியும். இவ்வாறு பில் சாட்லர் கூறினார். (ஸ்ரீ-2)

# அனோமாவை ஜனாதிபதியிடம் மன்னிப்பு கோரச்செய்வதே எதிர்க்கட்சியின் பொறுப்பு

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

அனோமா பொன்சேகாவை முன்னிலைப்படுத்தி அரசியல் இலாபங்களை பெற்றுக்கொள்ளாது, அவரை ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோர செய்வதே எதிர்க்கட்சியின் பொறுப்பு என பிரதமர் டி.எம்.ஜெயரத்ன நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பி.ப. 1மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

இதன் பின்னர் ,நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன் போது தனிப்பட்ட பிரேரணை ஒன்றை முன் வைத்து உரையாற்றிய கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க ஜனாதிபதியும்,பிரதமரும் அமைச்சுப் பதவிகளை வகிப்பது பொருத்தமற்றது என குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஜனாதிபதியே நிதியமைச்சர் பதவி பறிக்கப்பட்ட ஒருவர்,ஜனாதிபதி நிதியமைச்சர் பொறுப்பை வகிப்பதால்,நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது. நிர்வாகத்தை பரவலாக்குவது சிறந்த நடவடிக்கை இல்லையா?ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டால் அவர் அமைச்சர் பதவிகளை வகிக்கமாட்டார். நிர்வாகத்தை முன்னேற்றுவதற்காக சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த யோசனைக்கு ஆதரவு வழங்குங்கள். டி.எம்.ஜெயரத்ன அமைச்சுப்பதவியை வகிப்பதால்,பிரதமர் பதவியின் பணிகளை ஆற்ற முடியுமா? என்று தெரிவித்தார்.

இதன் போது குறுக்கிட்ட பிரதமர் ,பிரதமர் பதவியின் பணிகள் என்னவென்று கூறுங்கள் என ரவி கருணாநாயக்கவிடம் கேள்வி எழுப்பினர் இதற்குப் பதிலளித்த கருணாநாயக்க பிரதமர் பதவி என்பது வெறும் பெயரளவிலான பதவி என்றா கூறுகிறீர்கள்? எனக் குறிப்பிட்டார்.

இதனை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,ரவி கருணாநாயக்கவின் பிரேரணையை தாம் ஆமோதிப்பதாக குறிப்பிட்டார். தொடர்ந்தும் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க ,சட்டமா அதிபர் திணைக்களத்தை சுயாதீன நிறுவனமாக மாற்றியமைக்க வேண்டும். எனினும் தற் போது அந்த திணைக்களம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என தெரிவித்தார். முடிவொன்றை அறிவிக்கும் முன்னர் எப்படி சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்க முடியும் என்று கேள்வி எழுப்பினர்.இதற்கு ஆராய்ந்து முடிவை அறிவிப்பதாக சபாநாயகர் கூறினார்.

எனினும் இன்னும் முடிபு அறிவிக்கப்படவில்லை. சட்டமா அதிபரின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

சட்டமா அதிபர் என்பவர் ஜனாதிபதியின் கீழ் பணியாற்றும் அரசாங்க அதிகாரி. தேவையெனில் இரண்டு தரப்பினரின் சட்டத்தரணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சபாநாயகருக்கு முடிவொன்றை எடுக்க முடியும்.

சரத்பொன்சேகா மாத்திரம் அல்ல வேறு எந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பதவியை பறித்தாலும் அது மக்களின் தெரிவை நிராகரிப்பதாகும்.சபாநாயகரின் தீர்மானமின்றி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்க பதில் நாடாளுமன்றச் செயலாளருக்கு எந்த அதிகாரமும் இல்லை. இராணுவ நீதிமன்றம் என்பது சிவில் நீதிமன்றம் என சட்டமா அதிபர் கூறுகிறார்.அப்படி எனில் முதலாவது இராணுவ நீதிமன்றத்தில் சரத்பொன்சேகாவின் பட்டம்,பதவிகள் பறிக்கப்பட்டால் எவ்வாறு இரண்டாவது இராணுவ நீதிமன்றம் தீர்ப்பை வழங்க முடியும்? எனவும் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாக்கப்படுவது குறித்து அரசியல் யாப்பின் 60 ஷரத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. பதவி பறிக்கப்பட வேண்டிய காரணங்கள் 89 ஷரத்தில் கூறப்பட்டுள்ளன.

89 டி உப ஷரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சிறைத்தண்டனை பெறுவது குறித்து விதைந்துரைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற •உறுப்பினர் ஒருவர் 6 மாதம் அல்லது 2 வருடங்கள் சிறைத்தண்டனை பெற்றால்,அவரது பதவி பறி போகும் என கூறப்பட்டுள்ளது.

சரத்பொன்சேகா 30 மாத கால சிறைத் தண்டனையை பெற்றுள்ளார். இது குறித்து சபாநாயகரினால் முடிபு எடுக்க முடியாது. அரசியல் அமைப்பு உச்சமானது. நாடாளு மன்ற செயலாளருக்கு சபாநாயகர் ஆலோசனை வழங்க முடியாது .

இதனால் இது குறித்து விவாதிக்க வேண்டி அவசியம் இல்லை.சரத்பொன் சேகாவின் பதவி பறிபோகும். அது சட்டரீதியாக நடைபெறும் ஏற்பாடு எனவும் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி வலயங்களில், பணியாற்றும் அழகியல் பாட உதவி கல்விப் பணிப்பாளர் மற்றும் அழகியல் பாட முதன்மை ஆசிரியர்கள் ஆகியோருக்கான திட்டமிடல் செயலமர்வு எதிர்வரும் 13ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா வடக்கு மாகாண முதன்மை நிலை அலுவலகத்தில் வடமாகாண அழகியல் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு மேற்குறிப்பிட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நவராத்திரி விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் நவராத்திரி விழா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பி.ப 3.00 மணிக்கு காரைநகர் மருதபுரம் ஸ்ரீமருதமலை முருகன் ஆலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக த.சோமஸ்கந்தக் குருக்கள் கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் ''நவராத்திரி விழாவும் வாழ்வியலும்'' என்ற விடயம் தொடர்பாக பொ.சந்திரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (ஸ்ரீ)

# மீட்கப்பட்ட நகைகள் மீள்குடியேற்றத்தின் பின் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்

## அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக உள்ளக இடம்பெயர்விற்கு உள்ளானவர்களில் 5 இலட்சத்து 44 ஆயிரத்து 494பேர் இதுவரை மீள் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுய தொழில், மீன்பிடி,விவசாயம் மற்றும் அன் றாட கூலி வேலை செய்வதன் ஊடாக தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்வதாக பிரதி மீள் குடியேற்ற அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.


ரவி கருணாநாயக்க எம்.பி. வாய் மூல விடைக்கான கேள்விக்குப் பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் கூறுகையில் , தற்போது ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 755 பேர் முகாம்களில் உள்ளனர். மீள் குடியேற்றப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் மக்கள் மீள் குடியேற்றப்பட்டபின் அப்பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படும் மக்கள் வங்கிக்கிளைகள் ஊடாக மீள வழங்கப்படும்.

வவுனியா மெனிக்பாம் முகாமில் மீள் குடியேற்றுவதற்காக 8ஆயிரத்து 228 குடும்பங்களைச் சேர்ந்த 24ஆயிரத்து 280 பேர் எஞ்சியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 22ஆயிரத்து 264 குடும்பங்களைச் சேர்ந்த 64 ஆயிரத்து 924 பேரும் ,அனுராதபுரத்தில் 4ஆயிரத்து 273 பேரும், குருநாகலில் 730 பேரும், பாணந்துறையில் ஆயிரத்து 405 பேரும், புத்தளத்தில் 67ஆயிரத்து 428 பேரும் மீள் குடியேற்றப்படவேண்டியுள்ளனர் என்றார். (ஸ்ரீ-2)




பச்சிலைப்பள்ளிஅபிவிருத்திச் சங்கத்திற்கு யாழ். வணிகர் கழகத்தினரால் தையல் இயந்திரங்கள்,பாடசாலை உபகரணங்கள்,பால்மா பெட்டிகள் என்பன கடந்த வியாழக் கிழமை யாழ்.வணிகர் கழகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரத்திடமிருந்து பச்சிலைப் பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.இராமலிங்கம் தையல் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 17 . 08 . 1936



இறப்பு 10 . 09 . 2010

**திரு.செல்லையா நடராசா**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

பரிவுகாட்டிப் பாசமழை பொழிந்த அன்புத் தெய்வமே
சரிவில்லா வாழ்விற்கு உயிர் கொடுத்த உத்தமரே!
கண் விழித்து மண்ணுலகில் நீ சமைத்த தியாகங்கள்
விண்ணுலகு சென்றாலும் மறையாது நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பன்னையம்பதி வீதி,
வீரபத்திரர் கோவிலடி,
பருத்தித்துறை.

கி.நந்தினி
(மகள்)

(சி-1381)

மனிதனே உயிரினங்களுள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது அவனது சிந்தனைத்திறன். அதை முழுவதும் வளர்த்துக் கொள்வதே அவன் பிறவிப் பயனை அடைவதற்கு திறவு கோலாகும். –அரிஸ்டாட்டில்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நான் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்...

மாணவர்களே! இன்று கட்டுரை எழுதுவோம் ஆயத்தமாகுங்கள் என்றேன். சேர் கட்டுரைத் தலையங்கம் என்ன என்று மாணவர்கள் ஆவலோடு கேட்டார்கள்.

"நான் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்..." என்று தலைப்பைக் கூறினேன். வகுப்பறையில் சிரிப்பொலி.

கோபம் தலைக்கேறியது.என்ன சிரிப்பு என்று அதட்டலாகக் கேட்டேன்.

என்ன சேர் ஒரு பெறுமதியான தலைப்புத் தரமுடியாதா? என்று மாணவர்களிடமிருந்து பதில் வந்தது.

சத்தம்... தந்த தலைப்புக்கு கட்டுரை எழுதுங்கள் என்றேன். அமைதிக்குத் திரும்பிய மாணவர்கள் கட்டுரை எழுதும் பணியில் வேகமாயினர்.

எதனையும்முதலாவதாக செய்துமுடிக்கும் மாணவன், தான் எழுதிய கட்டுரையை கொண்டுவந்தான் அதில்...ஐயா!... ஐயா! அண்ணே!... அண்ணே! அட யாருமே இல்லையா? எங்க போயிற்றியள். தேர்தல் வந்த போது எங்கட வீட்டுக்கு வந்து எங்களைக் கும்பிட்டுயளே! இப்ப எங்க போயிற்றியள்? எங்கட நிலைமையைப் பாருங்கோ? எங்க போயிற்றியள்? இனி அடுத்த தேர்தலுக்குத்தான் வருவியள் போல.

இதோ நான் நாடாளுமன்ற உறுப்பினராக வந்து காட்டுகிறேன்...

இப்படி அந்த மாணவனின் கட்டுரைத் தொடக்கம் இருந்தது.

அடுத்த மாணவனும் தான் எழுதிய கட்டுரையை எப்படியும் என்னிடம் காட்டிவிட வேண்டும் என்ற ஆவலில் தனது கட்டுரையை என்னிடம் நீட்டினான். அதை வேண்டி நோட்டமிட்டேன். நல்லகாலம் பிறந்தது நானும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றேன் சொகுசு வாகனத்திற்கு தந்த பெர்மிட்டை விற்பனை செய்ததில் எனக்கு மகா மகிழ்ச்சி.

எனது தமிழ் ஆசிரியர் செய்த புண்ணியம் ஓரளவுக்கு அறிக்கை எழுதவும்கற்றுக் கொண்டேன். இப்போதெல்லாம் எது நடந்தாலும் அறிக்கை எழுதி ஊடகங்களுக்கு அனுப்பிவிட்டால் அது போதும் வருகிற தேர்தலுக்கு அதையே பிரசாரமாக்கி அடுத்தமுறையும் நாடாளுமன்ற உறுப்பினராகி விடலாம்.

ஆனாலும் ஒரு கவலை. எனக்கிருக்கும் மறதி காரணமாக சில சந்தர்ப்பங்களில் அறிக்கை எழுத மறந்து விடுகின்றேன்.

இப்படி அந்த மாணவனின் கட்டுரை இருக்க, இன்னொரு மாணவனின் கட்டுரை. வகுப்பில் கெட்டிக்கார மாணவனும் அவன்தான். அவனின் கட்டுரை எப்படி இருக்கின்றது எனப் பார்க்கும் ஆவலில் வேண்டிப் படித்தேன்.

விருப்பமில்லாத பதவியில் என்னை இருத்திப் பார்க்க என் தமிழ் ஆசிரியர் விரும்பினார். பரவாயில்லை ஏற்றுக் கொள்கிறேன். நான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால் நிச்சயமாக எம்மினத்தின் துன்பத்தை எடுத்துரைப்பேன். இல்லை என்றால் அந்தப் பதவியைத் தூக்கி எறிவேன்.

நான் யாரால் நாடாளுமன்ற உறுப்பினராகினேனோ அந்த மக்களுக்காகவே என் உடல் ஆவி பொருள் அனைத்தையும் தானமாக்கி தமிழுக்குப் பணியாற்றுவேன்.

உதாரணத்திற்கு சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் குடியமர வந்திருக்கிறார்களல்லவா? அது பற்றி ஜனாதிபதிக்கு தொலைநகல் அனுப்புவேன். யாழ். அரச அதிபரை சந்திப்பேன். இடம்பெயர்ந்த தமிழ் மக்களை முதலில் மீளக் குடியமர்த்துங்கள் அதற்குப் பின்பு சிங்கள மக்களை அவர்களின் உறுதிக்காணியில் (இருந்தால்) குடியமர்த்துங்கள்.

இதைச் செய்ய முடியாவிட்டால் யாழ்.செயலகத்தில் உண்ணாவிரதம் இருப்பேன். உலகமே! என் இனத்தின் அவலம் பார் என்று கத்துவேன்; கதறுவேன். ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். தமிழ் அரச அதிகாரிகள் நடுங்குவர்... இரகசியம் அம்பலமாகும்... இப்படி அந்த மாணவனின் கட்டுரை தொடர... என் கண்கள் குளமாகி அந்தத் தாளை நனைக்க... சேர்... சேர்... மாணவர்கள் அதிர்ந்து போக,

மாணவர்களே! இன்று என் மனநிலை சரியில்லை. நாளை பார்ப்போம்... மெதுவாய் எழுந்து வகுப் பறைச் சுவர்களைப் பிடித்தவண்ணம் நடந்தேன்.

# நாட்டின் 25 வீதமான மக்கள் உள ரீதியான நோய்களால் பாதிப்பு

## தேசிய உள சுகாதாரப் பேரவை தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் 25 வீதமான மக்கள் உள ரீதியான நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக உளச்சுகாதார பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

உலக சுகாதார தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளதாக உள சுகாதாரப் பேரவையின் தலைவர் டாக்டர் நிரோசன் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

ஏனைய நோய்களைப் போன்றே உள நோய்களும் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுவதாகவும் தற்கொலை செய்துகொள்ளும் 90 வீதமான இலங்கையர்கள் உள ரீதியான பாதிப்புக்களினால் அல்லலுறுவோர் எனத் தெரிவித்துள்ளார்.

மன அழுத்தம், இருதய நோய், போதைப்பழக்கம், புகைப்பிடிக்கும் பழக்கம் மற்றும் சுகாதாரமற்ற வாழ்க்கை முறைமை ஆகியவற்றினால் உள ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக நீரிவுநோய் மற்றும் இருதய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவு உள ரீதியான நோய்களை எதிர் நோக்குவதாகத் தெரிவித்துள்ளார்.

உள ரீதியான நோய்களைச் சந்திப்போர் ஆரம்பத்திலேயே சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் உள ரீதியான நோய்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வது தொடர்பில் சமூகத்தில் நிலவிவரும் தவறான கருதுகோள்களினால் அநேகமானவர்கள் சிகிச்சை பெற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிராமப்புற வைத்தியசாலைகளிலும் உள சுகாதார மருத்துவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# முத்தமிழ் சங்கமம் இசைத் தமிழ் விழா

திருமறைக் கலாமன்றம் நடத்தும் "முத்தமிழ்ச் சங்கமம்" இசைத்தமிழ் நான்காம் நாள் மாலை நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி- இ.அ.மி தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்பணி பி.தேவமித்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இசைவளாகத் தலைவர் கலாநிதி என்.வி.எம்.நவரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். செயலாளர் சோ.தேவராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் திருமதி சுதர்சினி கரண்சன் நெறியாள்கையில் "ஓடி விளையாடு பாப்பா" என்ற நடனமும் இடம் பெறவுள்ளது. அதைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் ந.பரந்தாமன் (பாட்டு), யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் லயஞானகுபேரபூபதி சி.மகேந்திரன் (மிருதங்கம்), சங்கீத வித்துவான் அ.ஜெயராமன் (வயலின்), யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை வருகை விரிவுரையாளர் ச.விமல்சங்கர் (தபேலா) ஆகியோர் பங்கேற்கும் இசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ)

# அரச கரும மொழித் தேர்ச்சியினை பரீட்சித்தலுக்கான எழுத்துப்பரீட்சை

இலங்கை பரீட்சை திணைக்களம் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களம் என்ப வற்றால், அரச ஊழியர்களிடமிருந்து சிங்களம் தரம் III க்கான எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த எழுத்துப் பரீட்சையானது எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறுமெனவும்; இதற்குரிய பாடத்திட்டம், பரீட்சை நடைமுறை, மாதிரி வினாத்தாள்கள், விண்ணப்பப்படிவ மாதிரி மற்றும் உரிய விபரங்களை WWW. languages.gov.lk என்ற அரச கரும மொழிகள் திணைக்களத்தின் இணையத் தளத்தின் மூலம் பார்வையிடலாம்.

குறித்த இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொண்ட விண்ணப்படிவ மாதிரிக்கு அமைய விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உரிய நிறுவனத் தலைவரின் சிபார் சுடன் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக் கிழமைக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை, இலங்கை பரீட்சைக்கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், வெல வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்த பாலில் அனுப்புதல் வேண்டும். மேலும் அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை - 2010" எனக் குறிப்பிடுதல் வேண்டும் என யாழ். பிராந்திய உள்ளூராட்சி, உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வாணிவிழா

கீதவாஹினி இசைக்கல்லூரியின் வாணிவிழா யா/ கனகரத்தினம் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக மக்கள் வங்கி முகாமையாளர் ப.சண்முகநாதமுதலி, சிறப்பு விருந்தினராக யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வே.ஞானகாந்தன், கௌரவ விருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.இதில் மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-136)

# எது பெரிது? நலமளிப்பதா? நன்றி சொல்வதா?

எந்த அறத்தை அழித்தாருக்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்,ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

ஆம், நன்றி என்ற 3 எழுத்துச் சொல் உயர்ந்த பண்புகளில் ஒன்றாகும். நன்றி என்ற வார்த்தைக்கு பல சக்திகள் பல குணங்கள் உண்டு.அவையாவன,

- நன்றி சொல்கின்றபோது ஒருவரின் உயர்ந்த குணத்தைப் பாராட்டுகின்றோம்.
- ஒருவரின் உதவியை நினைவு கூருகின்றோம்.
- அவர் செய்த நன்மைகளை அடுத்தவருக்கு வெளிப்படுத்துகிறோம்.
- உதவி பெற்றவர் தன்னுடைய பணிவை வெளிப்படுத்துகின்றார்.
- உதவி பெற்றவர் தானும் அப்படியே பிறருக்குச் செய்ய கற்றுக்கொள்கிறார்.
- நன்றி சொல்கின்ற போது பரஸ்பர நம்பிக்கையும் , அன்பும் ,நட்பும்,தோழமையும் உருவாகின்றன.

ஆம்,இத்தகைய குணநலன்கள் அடங்கிய இந்த நன்றி என்ற சொல்லை அனைவரும் எதிர்பார்க்கின்றனர். அப்படி செய்த உதவிக்கு நன்றியைப் பெறாத போது ஏமாற்றமும் வெறுப்பும் அடைகின்றனர். இது மனித இயல்பு,உலகின் நியதி.

இன்றைய நற்செய்தியில் இதைத்தான் ஆழமாகப் பார்க்கின்றோம். தொழுநோய்பிடித்து அல்லலுற்ற 10 பேர் யேசுவைப் பார்த்தமாத்திரத்தில் தொலைவில் நின்று கொண்டே இயேசுவே எங்கள் மேல் இரக்கமாயிரும் என்று கதறுகின்றனர். அப்படி என்றால் இதில் ஒரு உண்மை ஆழ மாகப் புதைந்து கிடக்கிறது. அக்காலத்தில் தொழுநோய், ஒரு சாபக் கேடான, பாவத்தின் விளைவாக நினைத்தனர். எனவே தொழு நோய் கண்டவருக்கு இரக்கம் காட்ட ஒருவரும் இல்லை. எனவே தான் இயேசுவைப்பற்றி கேள்விப்பட்ட அவர்கள் அவரிடம் இரக்கத்தை எதிர்பார்த்தனர்.



இயேசுவும் அவர்கள் மேல் மனம் இரங்கி அவர்களை குருக்களிடம் காட்டச் சொல்கிறார்.அப்படி அவர்கள் போகும் போது வழியிலே குணமடைகின்றனர். காரணம் இயேசுவின் வார்த்தையின் மட்டில் நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் கொண்டு செல்கின்றனர். அதுவே அவர்களுக்கு குணம் அளித்தது.

## பரமபிதா காட்டிய பாதை

ஆம்,இன்பத்திலும் ,துன்பத்திலும் இறைவனுக்கு என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். நன்றி என்ற பண்பை நாளும் போற்றுவோம். நன்றி தான் நம்மை இறைவனோடும் மனிதனோடும் உறவு கொள்ள வைக்கும் பாலம்.

ஜோன்


Sampath Pubudu
Children's Savings Account
Sampath சபிரி
சிறந்த நன்மைகளுடனான
சிறுவர் சேமிப்புக் கணக்குகள்
X SET
வளமான எதிர்காலத்தினை
இளையதலைமுறைக்கு
வழங்கும் சேமிப்புக் கணக்கு
Sampath DOUBLE S
சேமிப்புக் கணக்கு
ஒவ்வொரு மாதமும் வட்டிக்கு
போனஸ் வட்டி வழங்கும்
சேமிப்புக் கணக்கு
Sampath HIT SAVER
HIGHEST INTEREST TODAY
ஸ்ரீலங்காவில் அதிகூடிய வட்டி
வழங்கும் சேமிப்புக் கணக்கு
Sampath Sanhinda Saver
50 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு
மாதத்திற்கு இரண்டு முறை
வட்டியுடன் இன்னும் பல சலுகைகளை
வழங்கும் ஒரே சேமிப்புக் கணக்கு.
மிகுதியான சோறு
தேவையானவை
1. விரயம் செய்யாதவற்றில் சொற்பம்
2. தூர நோக்கு சேமிப்பு சிந்தனையில் ஒரு துளி
எமது முன்னோர்கள் மிஞ்சிய சோற்றினை காயவைத்து, இடித்து உருசியான அரிசி உருண்டை செய்வார்கள். அதற்கு தேவையான தூர நோக்கு சேமிப்பு பழக்கத்தினை அவர்கள் கொண்டிருந்தார்கள். அப்படியான பாரம்பரியத்தினை கொண்ட உங்களுக்கென பல சேமிப்பு முறைகள் எமது சம்பத் வங்கியிலுள்ளன. எனவே இந்த சேமிப்பு மாதத்தில் உங்கள் எதிர்காலத்தின் பொருட்டு சேமிக்க ஆரம்பிப்போம்.
சம்பத் வங்கி - உங்களுக்கான சேமிப்பகம்
Sampath Bank PLC - Company No. PQ 144 Grant McCann
www.sampath.lk
Sampath Bank Fitch Ratings AA-(lka)
தொலைபேசி இலக்கம்: 0112 30 30 50
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank


Dulux
NIPPON CEMENT
AkzoNobel
கட்டடப்பொருட்கள், மிற்சுயி நிப்போன் சீமெந்து, Akzonobel பெயின்ற் வகைகள் (எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ), நஷனல் பி.வி.சி (National PVC) குழாய்கள் மற்றும் எமது நிறுவனத்தால் யாழ்பாணத்தில் தயாரிக்கப்பட்ட தரமான முட்கம்பிகள் என்பன வற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
கஜமுகன் ஹாட்வெயர்
147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல: 021 222 2833

# பொன்டிங்,வோட்ஷன் ஆறுதல்; ஆஸி. அணி நிதான ஆட்டம்



பொண்டிங், வோட்ஷன் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் நேற்றைய முதல் நாள் முடிவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 285 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் கடந்த வாரம் மொகாலியில் நடை பெற்ற முதலாவது டெஸ்டில் இந்திய அணி ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந் நிலையில் இரண்டாவதும் இறுதியு மான டெஸ்ட் நேற்று பெங்களூர் சின்னச் சாமி மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் இந்திய அணியில் உபாதை காரண மாக காம்பீர், லக்ஸ்மன், இஷாந் சர்மா ஆகி யோர் விலகிய நிலையில் முரளி விஜய் அறி முக வீரர் புஜாரா மற்றும் சிறிகாந்த் ஆகியோர் இணைக்கப்பட்டனர்.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு வோட்ஷன்-ஹறட் டிச் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கி னர்.

இதில் ஷேன் வோட்ஷன் 57 பந்துகளில் அரைச்சதம் கடந்து நம்பிக்கையளித்தார். எனினும் அவுஸ்திரேலிய அணி 99 ஓட்டங் களை எடுத்த போது சைமன்ஸ் ஹறட்டிச் 95 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 43 ஓட் டங்களை எடுத்து ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் டிராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமி ழந்தார்.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் சுபான்சிங் பொறுப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் ஷேன்வோட்ஷன் 88 பந்து களில் (9 பவுண்டரிகள் உட்பட) 57 ஒட்டங் களை எடுத்து ஓஜாவின் பந்துவீச்சில் தோனி யிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மைக்கெல் கிளார்க் 26 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட் பட) 14 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஹர்ப ஜன் சிங்கின் பந்துவீச்சில் ரெய்னாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 132 ஓட்டங்களை எடுத்து 3ஆவது விக்கெட்டை யிழந்தது.

இந்நிலையில் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த பொன்டிங்-ஹசி ஜோடி சிறப்பான இணைப்பாட்டதை வழங்க அவுஸ்திரேலிய அணி சரிவிலிருந்து மீண்டது. இதில் அணித் தலைவர் பொன்டிங் 101 பந்துகளில் அரைச் சதம் கடக்க அவுஸ்திரேலிய அணி 150 ஓட்டங் களை எட்டியது.

இந்த ஜோடி 4ஆவது விகெட்டுக்காக 66 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது மைக்கெல் ஹசி 45 பந்துகளில் (4 பவுண் டரிகள் உட்பட) 34 ஓட்டங்களைப்பெற்று சகீர் கானின் பந்துவீச்சில் சேவாக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த நோர்த் நிதானமான ஆட் டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

இதில் அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 147 பந்துகளில் (12 பவுண்டரிகள் உட்பட) 77 ஓட்டங்களை எடுத்து சுரேஷ் ரெய்னாவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்ட மிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பெய்ன் பொறுப் பான ஆட்டத்தை வழங்க நேற்யை முதல் நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக அரைமணிநேரம் முன்தாக நிறுத்தப்பட்ட போது அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக் களையிழந்து 285 ஓட்டங்களை எடுத்தது.

இதில் நேர்த் 43 ஓட்டங்களையும் பெய்ன் 8 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 2 விக்கெட் டுக்களையும் சகீர்கான், பிரஜன் ஓஜா, ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த் தினர். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.


## Calling for Tender - Teaching Hospital, Jaffna.

01. The chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive separate sealed tenders for the following works up to 10.00 am on 20.10.2010 Tender from may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 15.10.2010 on payment on non refundable deposit.

| No | Nature of Work | Non Refundable Deposit |
|---|---|---|
| 01 | Painting to General administration office | Rs. 1,000 |
| 02 | Extension of Operation Theatre-T.H,Jaffna. | Rs. 1,000 |
| 03 | Extension room to ward 27-T.H,Jaffna. | Rs. 1,000 |

02. Tenders will be opened immediately after closing, at the office of the Director Teaching Hospital, Jaffna Tenderers or their authorized representative are requested to be present at the opening Tenders.

03. Tender forms are issued only to the contractor who has valid registration in Grade "M8" /C9 and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL)

04.Sealed Tenders may be dispatched either by registered post or be hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 20.10.2010

05.Tender Documents may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.

06. For further details Please Contact Hospital Secretary, Teaching Hospital, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

(C-1385)


## இலங்கைத் தமிழர் பிரச்...

அமைச்சர் தயாநிதி மாறன் உட்பட மத் திய மாநில அமைச்சர்கள், எம்.பிக்கள் உடனி ருந்தனர். இந்தச் சந்திப்பின் போது சோனியா காந்தியும் முதல்வர் கருணாநிதியும் சிறிது நேரம் பேசினார்கள்.

இதைத் தொடர்ந்து சோனியா காந்தியி டம் முதல்வர் கருணாநிதி மனு ஒன்றை அளித்தார். அதில், இலங்கை சென்று வந்த வெளியுறவுத்துறைச் செயலாளர் நிருபமா ராவ் அளித்துள்ள அறிக்கையின் மூலம், இலங்கை முள்வேலி முகாம்களில் 30 ஆயி ரம் தமிழர்கள் துன்புற்று வருவது தெரிய வந் ள்ளது.

தமிழர்கள் ஏற்கெனவே வாழ்ந்த இடங்க ளில் அவர்களைக் குடியமர்த்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு கிடைக்கவும் இலங்கை அரசிடம் மத்திய அரசு வலியுறுத்த நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று மனுவில் முதல்வர் கருணாநிதி கேட்டிருந்தார்.

சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களி டம் பேசிய முதல்வர் கருணாநிதி, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றிச் சோனியா காந் தியிடம் ஆலோசித்தேன்.

அது குறித்து மனு ஒன்றையும் அவரிடம் அளித்துள்ளேன். இலங்கைத் தமிழர் பிரச்சி னை குறித்துத் தீர்வு காணத் தனிப்பட்ட முறை யில் கவனம் செலுத்துவதாக சோனியா உறு தியளித்துள்ளார். (ந-5)

## தடுத்து வைக்...

ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரி கேடியர் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

தடுப்பிலிருந்த தமிழீழ விடுதலைப்புலி கள் பாரிய சித்திரவதைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ள நிலையில் அவர்களை விடுவித் தால் சர்வதேசத்தில் சிக்கல்கள் ஏற்படலாம் என்பதற்காகவே நச்சுவாயு கொண்டு சந்தே கத்துக்குரியவர்கள் அடையாளம் தெரியாமல் கொலை செய்யப்பட்டதாக முன்னதாகத் தக வல்கள் வெளியாகியிருந்தன.

இதனையே பாதுகாப்பு அமைச்சு முற் றாக நிராகரித்துள்ளது. (ந-5)

## தொலைக்கல்வி...

இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-11 இற்கு உள்வாங்கி முழுவேதனத்துடன் பணியாற்றவும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் எமக்கு ஆசிரி யப் பயிற்சியை அளிக்குமாறும் கோரி ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எமது கோரிக்கைக்கு அதிகாரிகள் சாதகமான முடிவை அறிவிக்கும் வரை எமது போராட்டம் தொடரும் என்றனர். (ந-5)

## இந்த வருடத்...

இடம்பெயர் முகாம்களில் தொடர்ந்தும் தங்கி யுள்ளன. இடம்பெயர் மக்கள் மற்றும் மீள்குடியேற் றப்பட்டோர் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் பிரதி நிதிகள் வெளியிட்டு வரும் புள்ளி விபரத் தகவல்கள் முன்னுக்குப்பின் முரணான வகையில் காணப்படு வ்தாக அரசியல் ஆய் வாளர்கள் சுட்டிக்காட்டு கின் றனர். (ந-5)


கணிதத்துறையில் 3 பாடங்களில் சித்தி இருக்கிறதா? பெறுபேற்றுக்காக காத்திருக்கிறீர்களா?

**1 வருடத்தினை சேமித்து**
**2014 இல் நீங்களும் ஒரு பொறியியலாளராகுங்கள்.....**

2010க்கான அனுமதிகள் எம்மூடாக மட்டுமே! உடனே இணையுங்கள்.. கல்லூரி ஆரம்பம் Nov 1st.

*Missed the E-Faculty! Leave the Worries!*
*SVCET – A perfect place, more than your expectations!*

**Courses Offered:**
- Bachelor of Engineering (BE)
- Civil Engineering
- Electrical and Electronics Engineering
- Mechanical Engineering
- Electronics and Communications Engineering
- Computer Science and Engineering
- Information Technology

SVCET ஆனது விசாலமானதும், வசதியானதுமான மாணவர் விடுதிகளை சர்வதேச மாணவர்களுக்காக இயற்கை எழில்கள் நிறைந்த சூழலில் வழங்குகின்றது.
Mr.Kirubakaran(Student,Srilanka)



SPECIAL SCHOLARSHIP FOR THE STUDENT WHO GOT 3 CREDITS AND ABOVE IN A/L

- Outlook magazine ranked SVCET among top 50 colleges in India based on the survey conducted inJune, 2010.
- Careers 360 Magazine graded SVCET by 'AA' grade in the survey conducted in September 2009.
- SVCET ranked 8 among Top Engineering College of excellence in India, by CSR-GHRDC Survey, August 2010.
- SVCET has been ranked 4 among top Engineering Colleges in Andra Pradesh by CSR-GHRDC survey 2010.

உடனடி அனுமதிகளை எமது யாழ் அலுவலகத்தில் 16, 17ஆம் திகதிகளில் கல்லூரியில் இருந்து நேரடியாக வருகை தந்திருக்கும் பிரதிநிதிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**Sri Venkateswara College of Engineering And Technology**
*Affiliated to Jawaharlal Nehru Technological University, Anantapur and Recognized by AICTE, New Delhi.*
Chittoor.
www.svcetedu.org

**V4 Educational Consultancy(Pvt)Ltd**
"Catalyst for your higher studies"

**Head Office:** #7 1/1, W.A.Silva Mawatta. Colombo 6.
**Branch:** #64, கனகரட்ணம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
T.P.: 077 3867257 / 021 222 1984
Web: www.v4edu.com E-Mail: mail@v4edu.com



**மகளிருக்கான துரித 3 மாத சான்றிதழ் பயிற்சிகள்**

**சனி, ஞாயிறு பிரிவுகளும் ஆரம்பமாகின்றன**

ஆரம்பம்: 17-10-2010 ஞாயிறு (விஜயதசமி நாளில்)

கேக் ஐசிங் உணவு தயாரித்தல் கூந்தல் அலங்காரம்

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் 15 நாள் Facial, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure, முடிஅயன்செய்தல், Perming, நிறமூட்டுதல், முடிவெட்டுதல் பயிற்சிகளும் நடைபெறும்.

தையல் அறிவு அற்றவர்களுக்கான 6 மாத உடை தயாரித்தல் பயிற்சிகள்
தையல் தெரிந்தவர்களுக்கான 15 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

25 வது ஆண்டில்

**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

Guru

# எனது கணவரை விடுவிக்காவிடில் நானும் பிள்ளைகளும் தீக்குளிப்போம்

## ஆணைக்குழு முன் சபதம்

எனது கணவர் இராணுவத்தினரால் கடத்தப்பட்டு மட்டக்களப்பிலுள்ள இராணுவ முகாம் ஒன்றில் கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ளார்.

எனது கணவரை இராணுவம் விடுதலை செய்யாவிடில் நானும் எனது பிள்ளைகளும் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொள்வோம் என காணாமல் போயுள்ள மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் சகாயமணியின் மனைவி யோசப் மேரி சகாயமணி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் நேற்று சாட்சியமளித்தபோது தெரிவித்தார்.

ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தபோது அவர் தெரிவித்ததாவது,

எனது கணவர் மட்டக்களப்பு மாநகர சபையின் ஒரு உறுப்பினர். கடந்த 23.08.2010 ஆம் திகதி காணாமல் போனார். இவரை மட்டக்களப்பிலுள்ள இராணுவத்தினர் வெள்ளை வானில் கடத்திச் சென்றதாக அறிகின்றேன்.

எனது கணவரை மட்டக்களப்பிலுள்ள இராணுவ முகாமில் கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் இராணுவத்தினர் வைத்துள்ளனர்.

தயவு செய்து அவரை விடுவிக்க உதவுங்கள். இல்லையேல் நானும் எனது பிள்ளைகளும் தீக்குளித்து உயிரை மாய்க்க வேண்டி ஏற்படும். எனது கணவர் குற்றம் செய்திருந்தால் நீதிமன்றத்தினூடாக அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள். எனது கணவர் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஒரு அங்கத்தவர்.

அரசாங்கம் நினைத்தால் எனது கணவரை விடுவிக்கலாம் என்றார். அப்போது உங்கள் கணவரை இராணுவம் கடத்திச் சென்றதை எப்படி நீங்கள் அறிந்தீர்கள் என ஆணைக்குழு உறுப்பினர்கள் கேட்டனர்.

இராணுவம்தான் எனது கணவரைக் கடத்திச் சென்றார்கள் எனும் தகவல் கிடைத்தது. அதை நான் நன்கு அறிவேன் என்றார் யோசப்மேரி சகாயமணி. தனது இரண்டு குழந்தைகளையும் அருகில் வைத்துக் கொண்டே, ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார். (ந-5)

## பாலியல்...

பெண் ஒருவர் கூக்குரல் இட்ட போது அருகில் உள்ளவர்கள் வந்து இராணுவச் சிப்பாய் ஒருவரை மடக்கிப்பிடித்து நையப்புடைத்ததுடன் குறித்த இராணுவச் சிப்பாயைக் கட்டி வைத்து விட்டு விடிந்ததும் மருதங்கேணி உதவி அரசாங்க பணிமனை அதிகாரிகள் மற்றும் அப் பகுதி இராணுவக் கட்டளையிடும் அதிகாரி ஆகியோரிடம் இரா்ணுவச் சிப்பாயை ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் அங்கு வந்த இராணுவக் கட்டளையிடும் அதிகாரி மக்களுக்கு முன்னரே குறித்த இராணுவச் சிப்பாயை அடித்ததோடு இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது என உறுதியளித்தார். (ந-5)

## புலிகளின் பேச்சாளர் இளந்திரையன்...

பெருந்திரளாகப் பொதுமக்கள் கூடியிருந்தனர். அங்கு சமுகமளித்தவர்களில் 90 வீதமானவர்கள் தமது காணாமல்போன உறவுகள் குறித்த தகவல்களைப் பெற்றுத் தருமாறு கோரிக்கையை விடுத்து அதற்கான படிவங்களை நிரப்பினர்.

மேலும் சிலர் தமது உறவுகள் இராணுவத் தடுப்பு மற்றும் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை விடுதலை செய்து தருமாறும் கோரினர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட உயரதிகாரிகள் இந்த ஆணைக்குழுவின் அமர்வுகளில் கலந்து கொண்டனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிறின்ஸ் காசிநாதர், முன்னாள் சமாதானக் குழுவில் அங்கம் வகித்த அருட்தந்தை உட்பட பலர் தமது முறைப்பாடுகளைத் தெரிவித்தார்கள்.

அவர்களின் வாக்குமூலங்களை ஆணைக்குழு பதிவு செய்து கொண்டது. முன்னாள் கிழக்கு மாகாண காணி ஆணையாளராக இருந்து ஓய்வு பெற்றவரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு உறுப்பினருமான கதிர்காமத்தம்பி குருநாதர் தனது வாக்குமூலத்தில் கடந்த கால ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் காணிப் பகிர்வில் நடந்து கொண்ட விதம் தமிழ் மக்களுக்கு விரோதமாக இருந்ததாக ஆதாரங்களுடன் தனது வாக்குமூலத்தில் சமர்ப்பித்தார்.

திருகோணமலை மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டம் வரை வன இலாகாவுக்கு ஒதுக்கப்பட்ட மற்றும் வேறு பல அரச தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகள் பலவந்தமாகச் சிங்களச் சகோதரர்களால் பொறுப்பேற்கப்பட்டு குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதற்கு ஆரம்ப கட்டத்தில் முக்கிய பொறுப்பாக இருந்தது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் என்றும் தமிழ், சிங்கள மக்களிடையே வெறுப்பையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தி சமாதானம், போர் நிறுத்தம் என்பன முறிவடைய இது ஒரு முக்கிய காரணமாக அமைந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலையில் வன திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட பெரும் காணிப் பிரிவுகள் சிங்களச் சகோதரர்களால் பறிக்கப்பட்டமை தொடர்பில் எந்தெந்த இடங்களில் பாதிக்கப்பட்டது போன்ற சகல விடயங்களையும் அவர் ஆணைக்குழு முன் சமர்ப்பித்தார்.

இதற்கு அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், ஆளுநர் மற்றும் அரச முக்கிய அதிகாரிகள் ஆகியோருக்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு இருப்பதாகவும் ஏனென்றால் அவர்களுக்குத் தெரியாமல் இது ஒன்றும் நடந்ததில்லை எனும் வகையில் அவரது வாக்குமூலம் அமைந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து ஆணைக்குழு முன்னிலையில் விடுதலைப்புலிகளின் முன்னாள் இராணுவப் பேச்சாளரான இளந்திரையன் எனப்படும் இராசையா சிவரூபனின் மனைவி சாட்சியமளித்தார்.

மூன்று பிள்ளைகளின் தாயான வனிதா சிவரூபன், தனது இளைய மகனுடன் சாட்சியமளிக்க வருகை தந்திருந்தார். இவர்கள் இருவரும் தமது சாட்சியங்களில் தமது கணவன் மற்றும் பிள்ளைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து கொண்டிருந்தபோது இராணுவத்தினரால் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்டு மூன்று மாதங்கள் கழிந்த போதிலும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற தகவலை தங்களால் அறிய முடியாதிருக்கின்றது.

தங்கள் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி அவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இவ் ஆணைக்குழு முன் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட இராணுவப் பிரிவின் முன்னாள் தளபதியான கிருஷ்ண பிள்ளை பிரபாகரனின் மனைவியான பொபித்தாபிரபாகரனும் சாட்சியமளித்தார். (ந-5)


Software Network } Engineer

Government Schol.



① System Admin., System Enginee

வருமானம் கூடிய வேலைவாய்ப்பு

① வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.

① USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree

*Carrier Guidance, Student Visa, Work Permit

① செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்

Per Module - ~~15000~~/= 4800/=

SMS your name & course to 0772 395 895 & get Schol.

Free IELTS-TOEFL, BCS, CCNA

MCS Supported By UNDP/JRRP

324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில், யாழ்ப்பாணம்

Closing Date 12.10.2010



**Tilko Jaffna City Hotel** is the first and foremost BOI approved luxury hotel managed by London based company situated in the heart of the Jaffna city which has been elegantly designed with modern amenities inclusive of comfortable rooms, Banquet Hall, Restaurant, Bar, Fitness Centre, Health Spa, Conference facilities with Business centre to cater the holiday makers and business community for relaxation. While on business matters. The company invites applications for the following vacancies which exist for immediate recruitment.

TILKO hotels

**Hotel Vacancies**

- Cooks-Indian/ Chinese/ Western
- pastry Cooks
- Kitchen Helpers
- Stores Helpers
- Receptionists
- House keepers
- Night Auditors
- Room Boys
- Door man
- Restaurant Supervisor
- Waiters
- Barman
- Cocktail Flaring Barman
- Plumbers
- Electricians
- Gardeners
- General Helpers

*Candidates should possess minimum 2 to 3 years experience in the relevant fields. Knowledge in English language will be an added advantage. Salary negotiable.*

**Accountant:** Young energetic Applicant should possess professional qualifications with minimum five years work experience and ability to work in computerized environment and responsible for submission of daily, weekly and monthly financial statements as required. Banking matters together with books and records to be maintained independently. Salary negotiable.

please forward your application along with names of two non related referees under registered post to reach:

**Tilko Jaffna City Hotels (Pvt) Limited, 70/6, K.K.S.Road, Jaffna.**

within 10 days or mail to: tilkojaffna@gmail.com

(C/1383)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.